# செந்தமிழ்ச் செல்வம்

## முதற் புத்தகம்

## முதற் பகுதி

ஆசிரியர் :
**வித்துவான் அ. வடிவேலன்**
*தலைமைத் தமிழாசிரியர்,*
*கலியாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளி,*
**தஞ்சை.**

இன்டர் நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி
**நுங்கம்பாக்கம் :: சென்னை-6.**

*விலை அணா 12*

முதற் பதிப்பு நவம்பர் 1951.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முகவுரை

செந்தமிழ்ச் செல்வம் என்னும் தலைப்புடன் முதற் புத்தக முதற் பகுதிக்கு உரியதாக இயற்றப்பெற்றுள்ள இப்புத்தகம் அரசியலார் அண்மையில் வெளியிட்டுள்ள புதிய பாட திட்டத்தைத் தழுவியது. இதில் மாணவருக்கு உகந்த பல பொருள்களைப் பற்றிய பாடங்களும் இடம் பெற்றுள்ளன. இலக்கியம், வரலாறு, கதை, வாழ்க்கை நிகழ்ச்சி, விஞ்ஞானம் சமூக வாழ்வு போன்ற எல்லாத் துறைகளிலும் சிறந்த கருத்துக்களை மாணவர்க்குத் தந்துதவும் நோக்குடன் இப்புத்தகம் இயற்றப்பெற்றுள்ளது. மேலும் இது மாணவரை எளிய நடையிலிருந்து படிப்படியாக உயர்ந்த நடைக்கு எடுத்துச் செல்ல முயலுகிறது. மாணவர்க்கு மகிழ்ச்சியும் ஊக்கமும் அளிக்கும் வகையில் தகுந்த படங்களும் இப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் மாணவர்க்கு மொழித் தேர்ச்சி உண்டாவதற்கு ஏற்ற வினாக்களும், பயிற்சிகளும், இலக்கணக் குறிப்புக்களும் தந்துள்ளேன். அருஞ் சொற்களுக்குப் பொருளும் உரைக்கப்பட்டுள்ளது. ஆயினும், ஆசிரியர்கள் தத்தம் வகுப்பு மாணவர் நிலைக்கேற்ப மற்றும் சில பயிற்சிகளைத் தரலாம்.

இப்புத்தகம் பின்னும் நன்கு அமைவதற்கு ஏற்ற திருத்தங்களை ஆசிரிய நண்பர்கள் அன்புடன் தெரிவிப்பின், மறு பதிப்பில் அவற்றைக் கைக்கொள்ள முயல்வேன். ஆசிரிய நண்பர்களது பேராதரவை எதிர்பார்க்கின்றேன்.

ஆசிரியர்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | **உரைநடை** | | |
| 1. | ஔவையும் அதியமானும் | ... | 1 |
| 2. | சாந்தி நிகேதனம் | ... | 7 |
| 3. | மதிவாணரின் மதிநுட்பம் | ... | 12 |
| 4. | உடற்பயிற்சி | ... | 17 |
| 5. | அசோகன் கண்ட அன்பு நெறி | ... | 21 |
| 6. | நாடும் நகரமும் | ... | 25 |
| 7. | பூமியின் கதை | ... | 30 |
| 8. | முதற் கடமை யாரிடத்து ? | ... | 35 |
| 9. | மாமல்லபுரம் | ... | 40 |
| 10. | புனிதவதியார் | ... | 46 |
| 11. | பழமொழிகள் | ... | 51 |
| 12. | கோழி வளர்ப்பு | ... | 52 |
| 13. | கிரேக்கப் பள்ளிகள் | ... | 58 |
| 14. | குடிசைத் தொழில்கள் | ... | 63 |
| 15. | எட்வர்ட் ஜென்னர் | ... | 68 |
| | **செய்யுள்** | | |
| I. | வாழ்த்து | ... | 73 |
| II. | கதை | ... | 74 |
| III. | நீதியுரை | ... | 79 |
| IV. | பல்சுவை | ... | 86 |

# செந்தமிழ்ச் செல்வம்

## முதற் புத்தகம்

[உரை நடை]

### 1. ஔவையும் அதியமானும்

தமிழ்ச் செல்வியாகிய ஔவையாரைச் சிறுவர் முதல் பெரியோர்வரை யாவரும் அறிவர். ஔவையார் ஒவ்வொருவர் உள்ளத்திலும் சிந்தனையிலும் புகுந்து பொருந்தி யிருக்கிறார் என்று கூறலாம். ஔவையார் பாடல்கள் அருமையும் பெருமையும் வாய்ந்தவை.

ஔவையாரின் சிற்சில குணங்களை இங்குக் குறிப்பிடுவோம். அக்காலத்தில் தமிழுலகம் ஔவையாரிடம் அன்பும் மரியாதையும் கொண்டிருந்தது. ஔவையார் நடுநிலை தவறாதவர்; பொருட்பற்றை அகற்றியவர். கூழுக்கும் பாடும் எளிமை அவரிடம் உண்டு. எளிய வாழ்க்கையும் கடவுட் பக்தியும் அவரிடம் குடிகொண்டிருந்தன. அவரைக் கலைமகளென்றும், கலைமகளின் அவதாரம் என்றும் தமிழுலகம் இன்னும் போற்றி வருகிறது.

ஔவையாருடைய பிறப்பு வளர்ப்புப் பற்றிப் பல வாறாகக் கூறப்படுகிறது. அவரைப் பாணர் மரபினர் என்றும், பாணரால் எடுத்து வளர்க்கப்பட்டவர் என்றும், சிலர் கூறுகின்றனர். பாணர் என்பவர் பண்



டைய தமிழ்க் குடிகளில் ஒருவகையினர். இவர்கள் இசை பற்றிய தொழில்களில் ஈடுபட்டவர்.

ஔவையார் இளமையிலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். தயக்கமின்றிக் கவிபாடுவதிலும் வல்லுநரானார். இங்ஙனம் புலமை பெற்று விளங்கவே, அவருடைய புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியது.

தற்போதுள்ள சேலம் கோயமுத்தூர் நீலகிரி ஜில்லாக்கள் கொண்ட பகுதி சங்க காலத்தில் **கொங்கு நாடு** என்று பெயர் பெற்றிருந்தது. இது பெரும்பாலும் மலைநாடுதான். இந்நாட்டின் மலைகளில் தேனடைகள் மிகுந்திருந்ததுபற்றி இந்நாட்டுக்குக் கொங்கு நாடு என்று பெயர் வந்ததென அறிஞர் கூறுவர்.

இக் கொங்கு நாட்டில் **தகடூர்** என்ற ஓரூர் இருந்தது. அது இப்போது **தருமபுரி** என வழங்கப்படுகிறது. அதியமான் நெடுமான் அஞ்சி என்ற அரசன் தகடூரைத் தன் தலைநகரமாகக் கொண்டு ஆண்டுவந்தான். அவனை அதிகமான் என்று அழைப்பது வழக்கம். அவன் ஒரு சிறந்த வீரன்; கல்வியறிவு படைத்தவன்; வள்ளல் தன்மை மிகுந்தவன்.

ஒரு நாள் ஔவையார் அதியமானிடம் பரிசில் பெறச் சென்றார். அதியமான் ஔவையாரின் புலமையைக் கண்டு வியந்தான்; ஆனால் அவருக்குப் பரிசில் கொடுக்காது காலம் தாழ்த்தினான். ஏன் தெரியுமா? "நாம் பரிசில் தந்தால் அவர் நம்மைவிட்டுப் போய்விடுவார். புலமைமிக்க ஒருவரின் கூட்டுறவை நாம் இழக்க நேரும் என்று அதியமான் எண்ணினான். இதையறியாமல் சீற்றங்கொண்ட ஔவையார் அதியனது போக்கைக் கண்டு வருந்தி ஒரு பாடல் பாடினார்.

உடனே அதியமான் தன் உண்மைக் கருத்தை வெளியிட்டு, ஔவையாருக்கு மிகுந்த பரிசுகள் கொடுத்தான். சீற்றந் தணிந்து மகிழ்ந்த ஔவையார் மற்றொரு பாடல் பாடி அதிகமானை மகிழ்வித்தார். நாளடைவில், அதிகமான் ஔவையாரைத் தன்னிடமே இருக்கச் செய்து அவர் அறிவுரைப்படி நடக்கலானான். அவர்கள் இருவரும் நாடோறும் நெருங்கிப் பழகினர். அவர்களுடைய நட்பு வளர்பிறைபோல வளர்ந்துவந்தது.

அதியன் ஒரு நாள் தன் நாட்டிலுள்ள மலைக் காட்சியைக் காணச் சென்றான். மலையுச்சியில் எவரும் ஏறிச் செல்லமுடியாத ஒரு பிளவில் ஒரு கருநெல்லிமரம் இருந்தது. அதில் ஒரே ஒரு கனி பழுத்திருந்தது. அதனை மிக முயன்று ஒருவன் பறித்துவந்து அளித்தான். அக் கனியால் என்ன நன்மை நேரிடும்? அக்கனியை உண்பவர், உடலுறுதி பெற்று நோயின்றி நீண்டகாலம் இளமையோடு வாழமுடியும் என்னும் உண்மையை அதிகன் அறிந்திருந்தான். அதனாலன்றோ அரும்பாடு பட்டு அவன் அதனைப் பறித்துவரச் செய்தான்? அக் கனியின் சிறப்பை அறிந்திருந்தும், அவனுக்கு அதையுண்ண மனம் வரவில்லை.

"இக் கனியை நான் உண்டால் பல மன்னர்களோடு போர்கள் புரிய நேரிடும். அதனால் மக்களுக்குத் துன்பமே உண்டாகும். ஆனால் ஔவையார் இக் கனியை உண்டால், நெடுங்காலம் வாழ்ந்திருந்து உலகுக்கு நல்லறிவு புகட்டுவார். ஆதலால் இக்கனியை உண்ணத் தகுந்தவர் ஔவையாரே என்று அதியன் தெளிந்தான்.

நேரே தன் இருக்கையை அடைந்த அதியமான் அவைக்கு வந்து, ஔவையாரை அழைப்பித்து அக்

கனியை அவரிடம் தந்து உண்ணச் செய்தான். ஔவை யாரும் அக்கனியின் தனிச் சிறப்பை அறியாது அதை வாங்கி உண்டனர். அதன்பின் அதியன் அதன் பெருமையை ஔவையாருக்கு விளக்கினன். "இத்தகைய சிறந்த கனியை நீ யுண்ணாது எனக்குத் தந்தனையே! உன் தியாகமே தியாகம். உன் நட்பே சீரிய நட்பு" என்று சொல்லி ஔவையார் அன்புக் கண்ணீர் உகுத்தார். காவலனிடம் தாம் கண்ட நற்பண்புகளைப் பாராட்டி "நீ இவ்வுலகில் சிவபெருமானைப்போல நிலைத்து வாழ்வாயாக" என்று வாழ்த்தினர். என்னே பெரியோர் நட்பின் சிறப்பு!

### அரும்பதவுரை

பற்று - ஆசை. மரபு - குலம். தயக்கம் - தங்குதடை. வல்லுநர் - வல்லவர். புலம் - அறிவு; புலமை - அறிவுடைமை. சங்ககாலம் - சற்று ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. வள்ளல் தன்மை - விரும்பி வருபவருக்கு அளவிடாமல் கொடுக்கும் தன்மை. தாழ்த்தினன் - தாமதித்தான். கூட்டுறவு - நெருங்கிய பழக்கம்.

### வினாக்கள்

1. ஔவையாரின் அரிய குணங்கள் எவை?
2. அதிகமானைப்பற்றி நீ அறிவது என்ன?
3. அதிகமான் ஔவையாருக்குப் பரிசில் தராமல் இருந்தது ஏன்?
4. அதிகமானிடம் ஔவையார் கண்ட அருஞ்செயல் யாது?
5. ஔவையார் அதியனை எவ்வாறு போற்றினர்?

### பயிற்சி

1. செல்வி, சிறுவர், பெருமான் - **எதிர்ப்பால் தருக.**
2. அருமையும் பெருமையும், வளர்பிறைபோல், இலக்கிய இலக்கணம், தியாகமே தியாகம், பிறப்பு வளர்ப்பு—ஒவ்வொரு தொடரையும் நும் சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
3. கனி, பண்பு, வள்ளல், சீற்றம்—வேறு சொற்கள் தருக

### இலக்கணம்

அதிகமான் ஔவையாரை உபசரித்தான் - இது ஒரு வாக்கியம். இதில் 'அதிகமான்' என்பது **எழுவாய்**; 'உபசரித்தான்' என்பது **பயனிலை**, 'ஔவையாரை' என்பது **செயப்படு பொருள்.**

அதிகமான் ஔவையாரை உபசரித்தான்.—இந்த வாக்கியத்தில் 'உபசரித்தான்' என்னும் வினைமுற்று வாக்கியப் பொருளை முடித்துக் காட்டுகிறது. அதனால் அது **பயனிலை**. உபசரித்தலாகிய செயலைச் செய்தவன் 'அதிகமான்'. அதனால், அப்பெயர் **எழுவாய்**. உபசரித்தலாகிய பயனை அடைந்தது யார்? ஔவையார். ஆதலின், 'ஔவையாரை' என்பது **செயப்படு பொருள்.**

பின்வரும் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் குறிப்பிடுக :—

1. அதிகமான் கொங்கு நாட்டை ஆண்டனன்.
2. ஔவையார் அதிகமானைப் புகழ்ந்தார்,
3. ஔவையார் பொருட்பற்றை அகற்றியவர்.
4. ஔவையார் இளமையிலேயே இலக்கிய இலக்கணங்களைக் கற்றார்.

## 2. சாந்தி நிகேதனம்

இரவீந்திர நாத் தாகூரைப் பற்றித் தெரியாத இந்தியர் எவரும் இரார். அவர் நம் நாட்டில் தோன்றிய மிகச் சிறந்த கல்வியாளருள் ஒருவராவார். அவருடைய தந்தையார் **தேவேந்திரர்** என்பவர். அவர் தம் கடைசிக் காலத்தில் போல்பூரைச் சார்ந்த சாந்தி நிகேதனம் என்ற இடத்தில் தனியே இருந்து வந்தார். தாகூரும் அங்கே சென்று சிறிது காலம் அங்குள்ள வனங்களிடையே அமைதியாக வாழ்ந்து வந்தார். அந் நாட்களில் ஆசிரமங்களில் வாழ்ந்து வந்த முனிவர்களின் வாழ்வைப்பற்றி அவர் ஆழ்ந்து சிந்திக்க



ஆரம்பித்தார். அடர்ந்த காடுகளிடையே அல்லவா ஆசிரமங்களை அமைத்துக் கொண்டு, முனிவர்கள் தம் சீடர்களுக்கு உயர்ந்த தத்துவங்களைப் போதித்து வந்தார்கள்? இவ்வெண்ணம் தோன்றவே, தாகூர் தாமும் ஒரு நல்ல கல்விச் சாலையை நிறுவ வேண்டும் என்று முடிவு செய்துகொண்டார்.

சிறு பிள்ளைகளுக்கென ஒரு பள்ளியைத் தாகூர் சாந்தி நிகேதனத்தில் ஆரம்பித்தார். மரங்களின் நிழலும், ஆசிரியரது இதயங்களில் பெருகிய அன்புமே பள்ளியின் முதற் பொருளாக அமைந்தன. ஐந்தே மாணவர்கள் அப்பள்ளியில் வந்துசேர்ந்தார்கள். ஆனால்

அவர்கள் வெகு விரைவில் எவ்வளவோ மாணக்கர்களை அங்குச் சேர்க்க வழி செய்து விட்டார்கள். புராணக் கதைகளைச் சொல்லிச் சொல்லிக் குழந்தைகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார்கள். அங்கிருந்த ஆசிரியர்கள் இப்படிச் சிறு அளவில் அமைக்கப்பட்ட சாந்தி நிகேதனப் பள்ளி இன்று விசுவ பாரதி பல்கலைக் கழகமாய், உலகத்திலுள்ள பல நாடுகளும் வியக்கும் வகையில் நிகழ்கிறது.



அங்குள்ள பள்ளி ஓர் ஆசிரமத்தில் அமைந்துள்ளது. அந்தப் பள்ளியிலுள்ள மாணவர்களின் ஒரு நாளைய நிகழ்ச்சிகளைச் சற்றுக் கூறுவோம். கதிரவன் எழுமுன்பே மாணவர்கள் எழுந்து விடுவார்கள். அவர்களுள் ஒரு சிலர் முன்பே எழுந்திருந்து கடவுள் வணக்கப் பாடல்களைப் பாடிக் கொண்டு ஆசிரமத்தைச் சுற்றி வருவார்கள். நிசப்தமான அவ்வேளையில் எழும் அப்பாக்களின் ஒலி மனத்துக்குப் பேரின்பத்தை அளிக்கும்.

சிறிது நேரம் கழித்து ஒவ்வொரு மாணவனும் அப்பரந்த வெளியில், ஓர் ஆசனத்தமர்ந்து தனியாகத் தியானம் செய்ய ஆரம்பிக்கிறான். பிறகு, பள்ளி கூடுவதற்குள் குளிப்பது முதலான வேலைகளை முடித்துக் கொள்வான்.

காலை பத்தரை மணி வரையில் மாணவர்கள் பள்ளியில் இருந்து படிப்பார்கள். அவர்களுக்குப் பெரிய வகுப்பறைகள் இல்லை. வானமே கூரை; மரநிழலில் ஆசிரியரைச் சுற்றி மாணவர்கள் உட்கார்ந்து கொள்வார்கள். எட்டு அல்லது பத்து மாணவர்கள் ஒன்று சேர்ந்து ஓர் ஆசிரியரைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு கேள்விகள் கேட்பது வழக்கம். ஒரு சில புத்தகங்களே உபயோகிக்கப்படுகின்றன. கல்வி பெரும்பாலும் உரையாடல் முறையிலேயே போதிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் மாணவர்கள்மீது அன்பு கொண்டு அவர்களுக்குள்ள ஐயங்களையும் இன்னல்களையும் நீக்க முயல்வர். இத்தகைய கல்வி முறையின் நல்விளைவுகள் என்றும் அழிவுறா.

காலைப்பள்ளி முடிந்ததும் மாணவர்கள் உணவருந்தச் செல்வார்கள். மறுபடியும் இரண்டு மணிக்குப் பள்ளி வேலை தொடங்கும். ஒவ்வொரு மாணவனுக்கும் ஏதேனும் ஒரு கைத்தொழிலில் பயிற்சி அளிக்கப்படும். கைத்தொழில் அதிகமாகப் பழக்கத்தில் வரவே, சில மாணவர்கள் மர வேலைகளிலும், சிலர் நூற்றல், நெய்தல் முதலியவற்றிலும் தனிப் பற்றுக் காட்டுவார்கள். சிலர் ஓவியத்திலும் இசை முதலான நுண்கலைகளிலும் ஆர்வங் கொள்வார்கள். அவரவர்களுக்கு ஏற்பக் கல்வியளிக்கும் பள்ளிகள் வெகு சிலவே. அவற்றுள் சாந்தி நிகேதனப் பள்ளி தலை சிறந்து விளங்கும்.

நான்கு மணிக்குப் பள்ளி வேலை முடிந்தவுடன் எல்லா மாணவர்களும் விளையாட ஓடி வருவார்கள் ; சூரியன் மறையும் வரை விளையாடிக்கொண்டிருப்பார் கள். பிறகு எல்லோரும் தியானம் செய்ய அமைதியான இடத்தில் உட்காருவார்கள். இராக்காலங்களில் கதைகள் சொல்வதும், நாடகங்கள் நடிப்பதும், குரு தேவரது பாடல்களை ஒப்புவிப்பதும்தான் பொழுது போக்கு ; ஒன்பது மணிக்கு எல்லோரும் படுக்கச் செல் வார்கள். அதற்குமுன் அதிகாலையில் செய்ததுபோலவே சில மாணவர்கள் பாடிக் கொண்டு ஆசிரமத்தைச் சுற்றி வருவார்கள். மாணவர்களின் இன்ப மயமான வாழ்க் கையை எடுத்துச் சொல்ல இயலாது. அங்குக் கற்கும் மாணவர்களின் முகங்களே அவர்கள் மகிழ்ச்சியை எடுத் துரைக்கும். சாந்தி நிகேதன மாணவர்களது சுதந்திர வாழ்வைப் போல் இந்தியாவில் வேறெந்தப் பள்ளியி லும் மாணவர்கள் வாழ்வு அமையவில்லை என்று சொல்லலாம்.

சுய தேவையைத் தானே பூர்த்தி செய்துகொள் ளும் வகையில் மாணவர்கள் வாழ்வு அமைந்துள்ளது. காலையில் தாங்கள் குளிப்பதற்குத் தாங்களே கிணற்றி னின்று மாணவர்கள் நீர் இறைத்துக்கொள்ளவேண்டும். தங்கள் படுக்கைகளைத் தாங்களே தயாரித்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் ஆடம்பரமான பொருள்களை உபயோகித்தல் கூடாது. உண்மையில் மாணவர்கள் இதில் மிக்க எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். அவர்கள் பிற்காலத்தில் வீண் செலவுகளில் பணத்தைச் செலவழிக்காமலிருக்க, இது பெரிதும் பயன்படுகிறது. தாகூரின் வித்தியாலயத்திலே குழந்தைகளின் சுய உணர்ச்சியை வெளிப்படுத்தும் தன்மைக்கு மிகுந்த

ஆதரவு அளிக்கப்படுகிறது. இசை, நாட்டியம், ஓவியம் முதலியவை கல்வியில் சிறந்த இடம் பெறுகின்றன. மாணவர்கள் தாங்களே பத்திரிகைகள் நடத்துகின்றனர். தாகூரின் நாடகங்களையோ, அன்றித் தாங்களே எழுதிய நாடகங்களையோ அன்னார் நடிப்பர்.

பிற பள்ளிகளைப்போலின்றித் தாகூரின் கல்விச் சாலையில் மாணவர்கள், ஆசிரியர்கள் என்ற வேற்றுமை சிறிதும் இன்றி, எல்லோரும் ஒரே குடும்பத்தினரைப் போல் பழகி வருகின்றனர். இந்த ஆசிரமத்தில் இருந்த போதுதான் தாகூர் பெரும்பான்மையான பாடல்களை இயற்றினர். தாகூரை உலகம் வியக்கும் ஒரு கவியரசராகச் செய்தது கங்கை நதியின் வனப்பும், அதன் இரு கரைகளிலும் நிறைந்து கிடக்கும் சோலைகளுமேயாகும்.

### அரும் பதவுரை

தத்துவம் - உண்மை. நிறுவ - ஏற்படுத்தசாந்தி நிகேதனம்-அமைதியின் இருப்பிடம். இதயம் - உள்ளம். விசுவ பாரதி - அகில உலக கலைக் கழகம். நிசப்தம் - அமைதி. பரந்த - விசாலமான. உரையாடல் - சம்பாஷணை. ஐயம் - சந்தேகம். இன்னல் - துன்பம், ஓவியம் - சித்திரம். நுண்கலை - சித்திரம் சிற்பம் இசை போன்ற உயர்ந்த கலைகள். வனப்பு - அழகு.

### வினுக்கள்

1. தாகூர் சாந்தி நிகேதனக் கல்விச் சாலையை நிறுவக் காரணமாயிருந்தது எது ?
2. சாந்தி நிகேதனம் எவ்வாறு தோன்றி வளர்ந்தது ?
3. சாந்தி நிகேதனம் மாணவர் வாழ்க்கையைப்பற்றி நீவிர் அறிவதென்ன ?
4. மாணவர்கள் சாந்தி நிகேதனத்தில் எந்த அடிப்படையான கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் ?
5. சாந்தி நிகேதனத்தில் கற்பிக்கப்படுவன எவை ?

### பயிற்சி

1. இரார், பேரின்பம், பரந்த, அழிவுறு-எதிர்ப் பதம் தருக.

2. கொள்கை கொண்டார்கள், உரையாடல் முறை, நுண்கலை, இன்ப வாழ்க்கை, ஆடம்பர வாழ்க்கை - இத் தொடர்களை அமைத்து வாக்கியம் எழுதுக.

3. கதிரவன், சோலை, ஆசனம், கங்கை, இவற்றைக் குறிக்கும் வேறு பெயர்கள் தருக.

### இலக்கணம்

அவருடைய **தந்தை**யார் தேவேந்திரர் என்பவர் - இதில் தந்தை என்பது உறவு முறையைக் குறிப்பதால் **முறைப் பெயர்** எனப்படும். இதுபோன்ற முறைப்பெயர் நான்கு கூறுக.

---

## 3. மதிவாணரின் மதிநுட்பம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் **வரகுணன்** என்ற பாண்டிய மன்னன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தான். அவன் ஒரு சிறந்த போர் வீரன்; நடுநிலை தவறாது நாடுகாவலில் நாட்டங் கொண்டிருந்தான்; குடியோம்புதலில் கண்ணுங் கருத்து மாயிருந்தான்.

அவனது ஆட்சியில் **மதிவாணர்** என்ற அமைச்சர் அவனுக்குப் பெருந்துணையாக இருந்தார். அவர் தம் பெயருக்கேற்பக் கூரிய மதிபடைத்தவர். அரசனது நல்லாட்சிக்கு அடிப்படையாக இருந்தவர் அவரே.

"அறன்அறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்
திறன் அறிந்தான் தேர்ச்சித் துணை"

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப மதிவாணர் விளங்கினர். எவ்வளவு சிக்கலான வழக்காக இருந்தாலும், அதன் உண்மையை உணர்வதில் மதிவாணர்

வல்லவர். அவரது உதவியால் பாண்டியன் இனிது காலங்கழித்து வந்தான் ; நாட்டையும் சீரிய முறையில் ஆண்டுவந்தான்.

பாண்டியனது ஆட்சியில் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக அமைச்சு வேலை பார்த்து வந்த மதிவாணருக்கு, வயது என்பதாகிவிடவே, தமக்கு ஓய்வு தர வேண்டுமென்று அவர் அரசனை வேண்டினர். மதிவாணரைப் பிரிந்திருக்க மன்னன் மனமிசையவில்லை. ஆயினும், அவரது தளர்ந்த உடல்நிலையைக் கண்டு, மேலும் அவரை வற்புறுத்துவது தவறெனக் கருதி அவருக்கு ஓய்வளிக்க ஒருப்பட்டான் வேந்தன். அவர் வேலையை விட்டு நீங்குமுன், அவருக்குப்பின் அமைச்சர் பதவியை வகிக்கத்தக்க ஒருவரை அமர்த்திவிட்டுப் போகும்படி அவரை வேண்டினன்.

அமைச்சர் பதவிக்கு வர விரும்புவோர் மறுநாள் காலையில் பாண்டியன் அரண்மனையில் குறிப்பிட்ட ஓரிடத்தில் வந்திருக்க வேண்டுமென்று அரசன் நகரம் முழுவதும் பறை சாற்றச் செய்தான். மறுநாள் காலையில் அமைச்சராவதில் ஆவல் கொண்டோர் சிலர் அவ்வாறே வந்து சேர்ந்தனர். அவர்களையெல்லாம் மதிவாணர் ஓர் இருட்டறைக்குள் அனுப்பி, அங்கே தங்கியிருக்கச் செய்தார்.

வரகுணன் அரியணையில் அமர்ந்ததும், மதிவாணர் இருட்டறையில் அடைந்து கிடந்தவர்களை மன்னர் முன்பு அழைத்துவரச் செய்தார். மன்னன் முன்னிலையில் மதிவாணர் அவர்களைப் பார்த்து, " ஐயன்மீர் ! நம் மன்னர்பிரானுக்கு நடனத்தில் விருப்பம் அதிகம் ! நன்முக ஆடத் தெரிந்தவரைத்தான் மன்னர் மந்திரியாகத் தேர்ந்தெடுப்பார் ! ஆகையால், நீங்கள் உங்களுக்

குத் தெரிந்தவளவில் ஆடலாம்!" என்று கூறிவிட்டுத் தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்தார்.

மதிவாணர் அவ்வாறு கூறியதன் காரணம் இன்னதென மன்னனுக்கு முதலில் விளங்கவில்லை. ஆயினும், தன் அமைச்சரிடம் கொண்டிருந்த நம்பிக்கையால் என்ன நடக்கிறதென ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்.



வந்து கூடியிருந்தவர்களில் ஒருவரும் எழுந்து ஆட முன்வரவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தனர். இறுதியில் ஒருவர் மட்டும் எழுந்து முன் வந்து, தமக்குத் தெரிந்த அளவு ஆடினார். மதிவாணர் அஃ்தவரையே தமக்குப் பிறகு அமைச்சராக நியமிக்குமாறு அரசனைக் கேட்டுக்கொண்டார். அரசனும் அவரை ஏற்றுக் கொண்டான். பிறகு அரசன் மற்றவர்களை நோக்கி "ஏன் நீங்கள் ஆட முன்வர

வில்லை" என்று வினவினன். ஒருவராவது அதற்கு விடையிறுக்கவில்லை.

மதிவாணர் அரசனைப் பார்த்து "அரசே! அவர்களது சட்டைப் பைகளைப் பரிசோதித்துப் பாருங்கள்" என்றார். வரகுணனும் அவ்வாறே செய்து நிரம்பப் பொற்காசுகளும் வெள்ளி நாணயங்களும் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

"இக் காசுகள் நம் பண்டாரத்தைச் சேர்ந்தவையாயிற்றே? இவர்கள் எங்ஙனம் இக் காசுகளைப் பெற்றார்கள்?" என்று வினவினன் மன்னன்.

நான் இவர்களையெல்லாம் ஓர் இருட்டறையில் அடைத்து வைத்திருந்தேனல்லவா? பொற்காசுகளையும் வெள்ளிக் காசுகளையும் கூடைகளில் நிரப்பி இவர்கள் புகுமுன் நான் அவ்வறையில் வைத்திருந்தேன். பிறர் பொருளை நச்சாத நன்மக்களாயின், இவர்கள் ஆடமாட்டார்களா? பொற்காசுகளும் வெள்ளிக் காசுகளும் நிறைந்த பைகளுடன் ஆடினல், ஒலி உண்டாகும்; அவர்களுடைய திருட்டு வெளிப்படும். இதற்கஞ்சியே அவர்கள் ஆடாமல் வாளாவிருந்தனர்!" என்று விளக்கியுரைத்தார் மதிவாணர்.

வரகுணன் மதிவாணரின் மதிவன்மையை மெச்சி, அவருக்கு ஓய்வு கொடுத்துவிட்டான். அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவரைத் தன் அமைச்சராகக் கொண்டான்.

### அருஞ்பதவுரை

ஓம்புதல் - பாதுகாத்தல். அடிப்படை - ஆதாரம்.

**திருக்குறள்,** அறன் அறிந்து - அரசனல் செய்யப்படும் கடமைகளை அறிந்து. ஆன்று - (கல்வியால்) நிறைந்து. அமைந்த சொல்லான் - அடங்கிப் பேசும் தன்மையுள்ளவன். எஞ்ஞான்றும் - எப்பொழுதும். திறன் அறிந்தான் - காரியங்களைச் செய்

யும் வகையை அறிந்தவன். தேர்ச்சித் துணை - ஆலோசனைக்கு ஏற்ற துணைவன்.

வற்புறுத்துவது-கட்டாயப் படுத்துவது. அறியணை - சிங்காதனம். விடையிறுக்க - பதில் கூற. நச்சாத - விரும்பாத. வாளா - சும்மா. பண்டாரம் - பொக்கிஷம்.

**வினுக்கள்**

1. மதிவாணர் அமைச்சராயிருந்து வரகுணனுக்குச் செய்தது என்ன ?

2. புதிய அமைச்சரைத் தேர்வதற்கு மதிவாணர் என்ன ஏற்பாடு செய்தார் ?

3. பாண்டியன் முன் நடனமாட ஒருவரே முன்வரக் காரணமென்ன ?

4. தேர்ந்துகொள்ளப் பெற்றவரே அமைச்சர் பதவிக்கு ஏற்றவர் என்பதை வரகுணனுக்கு மதிவாணர் எப்படி விளக்கினுர் ?

5. இக்கதையால் நீவிர் அறியும் உண்மைகள் யாவை ?

**பயிற்சி**

1. கண்ணுங் கருத்துமாய், விடையிறுக்க, பறைசாற்ற, வற்புறுத்துவது, மதிவன்மை—**இத்தொடர்களை வாக்கியங்களில் அமைக்க.**

2. இறுதியில், பெருந்துணை, சிக்கலான, முன்னிலை, விருப்பு—**எதிர்ப்பதம் தருக.**

3. இருட்டறை, பண்டாரம், வாளாவிருந்தனர், மதிவன்மை—இப்பதங்களில் ஏற்றதை அடியில் வரும் வாக்கியங்களில் கோடுள்ள இடத்தில் பொருத்துக :

(1) சோழ மன்னன்————பொன்னும் மணிகளும் நிறைந்திருந்தன.

(2) அமைச்சர் கூறிய அறிவுரை கேட்டு அங்கிருந்தோர்————.

(3) குற்றவாளிகள் என்று கருதப்பட்ட சிலர்————அடைக்கப்பட்டனர்.

(4) ————உடையவர் என்றும் எங்கும் யாவராலும் போற்றப்படுவர்.

## 4. உடற்பயிற்சி

நாம் உடலை நன்கு பேணி வளர்த்துப் பாதுகாத்து வர வேண்டும். இன்றேல், எந்த வேலையையும் சரிவரச் செய்து முடிக்க இயலாது. உடலை நன்முகப் பேணு வதற்கு உடற்பயிற்சி மிக இன்றியமையாதது. மிக்க அறிவு படைத்தும் உடல் வலிமை இல்லையேல், அவ் வறிவு உலகிற்குப் பயன்படாது போகும். ஆகவே மாணவர்கள் உடற்பயிற்சி, விளையாட்டு முதலியவற்றில் நன்கு ஈடுபடல் வேண்டும்.

உடலை ஒரு வயலுக்கு ஒப்பிடலாம். வயலை உழுது பயிரிடும் குடியானவனை ஒரு மாணவனுக்கு நிகராகக் கூறலாம். அறுவடை முடியும்வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ அவன் உழைக்கிமுன். அறுவடை முடிந்தபின் அவன் தக்க ஓய்வு பெறுகின்முன். அதைப் போலவே மாணவனும் படிப்பது, எழுதுவது போன்ற தீவிர வேலைகளைச் செய்து முடித்ததும் தக்க ஓய்வுபெற வேண்டும். இவ்விதம் தீவிர வேலைக்குப் பின் மேற் கொள்ளும் ஓய்வுதான் அவனுடைய களைப்பை நீக்கி உடலுக்கும் மனத்திற்கும் உற்சாகத்தை ஊட்டுகிறது. 'ஓய்வு' என்பதற்கு வேலையற்றுச் சோம்பிக் கிடத்தல் என்பது பொருளன்று. தான் செய்து வந்த தீவிர வேலையை விட்டுத் தனக்கு இன்பமூட்டக்கூடிய வேறு ஒரு வேலையைத் தானே விரும்பிச் செய்வதைத் தான் 'ஓய்வு' என்ற சொல்லால் நாம் குறிப்பிடுகிமும். இவ்வித ஓய்வுநேர வேலைகளில் தலை சிறந்தது உடற் பயிற்சியேயாகும்.

ஆழ்ந்த சிந்தனையால் களைப்புற்ற மனத்திற்கும், ஓயாத வேலையால் தளர்ச்சியுற்ற உடலுக்கும் ஒருங்கே

ஓய்வு தந்து புத்துயிர் அளிக்கவல்லது உடற் பயிற்சியே யாகும். சில மணி நேரங்களுக்கு ஓயாமல் புத்தகங்களைப் படிப்பது, எழுதுவது, ஆழ்ந்து சிந்திப்பது போன்ற வேலைகளைச் செய்யுங்கள். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப்பின் உங்கள் மூளை வேலை செய்ய மறுக்கிறது அல்லவா? இதற்குக் காரணம் என்ன? மூளைக்குள்ள ஆற்றல் ஒரு குறிப்பிட்ட அளவுடையது. அவ் வெல்லையை மீறியவுடன் அது வேலை செய்ய இயலாமல் துன்புறுகிறது. அச்சமயத்தில் மூளைக்கு உகந்த விளையாட்டில் சிறிது நேரம் ஈடுபடுங்கள். மறுபடியும் உங்கள் மூளை தீவிர வேலைகள் செய்யத் தகுதியுடையதாயிருப்பதை அறிவீர்கள். ஆகவே மனமும் உடலும் வேலைக்குப் பின் ஓய்வை நாடுகின்றன.

இளைஞர்கள் ஒன்று கூடிப் பலவிதமான விளையாட்டுக்களில் ஈடுபடலாம். மற்றும் மாலையில் வெளியே உலாவச் செல்லலாம். வயல்வெளி, புல்தரை, ஆற்றோரம் முதலிய இடங்களில் உலாவுதல் மிக்க இன்பம் தரும். ஞாயிற்றின் தோற்றம் மறைவு ஆகிய காட்சிகள் எவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும். மாலை மதியத்தைக் கண்டு மகிழ்ச்சியுறுங்கள். நல்ல இசையைக் கேட்பதில் சிறிது நேரம் ஈடுபட்டு இன்புறலாம். இங்ஙனம் இயற்கைக் காட்சிகளைக் காண்பதிலும் இசை நுகர்ச்சியிலும் நாடோறும் ஒன்றிரண்டு மணி நேரம் செலவழித்துப் பாருங்கள். உங்கள் மனத்தில் ஒரு புத்துணர்ச்சி உண்டாகும். உங்கள் உடலில் ஒரு புது சக்தி தோன்றும். உங்களுக்கு உண்டாகும் மனச்சாந்தி உங்களைப் புது மனிதர்களாக்கிவிடும்.

மேற்சொன்னவை அனைத்திலும் சிறுவர்களுக்கு சாலச் சிறந்தவை உடற்பயிற்சியும் அதற்கான விளை

யாட்டுக்களுமேயாம். உடற்பயிற்சி விளையாட்டுக்களால் விளையும் நன்மைகள் யாவை? உடலுக்கு நல்ல வலுவைப் பெறுவதும், மனத்திற்கு ஓய்வு கொடுப்பதும், பலர் ஒன்றுபட்டுச் செயல்கள் புரியக் கற்றுக் கொள்வதும், குழுத் தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கப் பயிற்சி பெறுவதும் நாம் பெறும் முக்கியமான நன்மைகளாகும்.

இளமைப் பருவத்தில்தான் நரம்புகள் முறுக்கேறி வலுவடையும். இப்பருவத்தில்தான் நம்முடல் வலிமை பெற்றுப் பிற்கால வாழ்க்கைக்கு இன்றியமையாத வலிமையைச் சேர்த்துவைக்க முடியும். ஆதலால், சிறுவர்கள் நன்றாக விளையாடுவது, விரைவாக நடப்பது அல்லது ஓடுவது, நீந்துவது போன்ற உடற்பயிற்சிகளில் முழுமனத்துடன் ஈடுபட்டுப் பயனடைய வேண்டும்.

"இன்றைய இளைஞரே நாளைய தலைவர்" என்ற முதுமொழியை மனதிற் கொள்ளுங்கள். உங்களுடைய குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் சிறந்த சேவை செய்யும் பொறுப்பு உங்களுடையதுதான். ஆனால் நல்ல சுவரில்லாமல் நல்ல சித்திரம் வரைய முடியாதல்லவா? அதுபோலவே நல்ல வலிய உடல் இல்லையாயின் சிறந்த பணிகளில் ஈடுபடுதல் இயலாமற் போகும். ஆதலின், வருங்காலத்தில் நீங்கள் ஆற்ற வேண்டிய பெரும்பணிக்கு உங்களைத் தகுதியுடையவராக்கிக் கொள்ளுங்கள். இம்முயற்சியின் முதற்படி உடல் நலம். ஆகவே, உடல் நலத்தை முதலில் பேணுங்கள்.

### அரும்பதவுரை

பேணி - போற்றிப் பாதுகாத்து. தீவிரம் - கடுமையான. சிந்தனை - நினைத்தல். புதுமை + உயிர் = புத்துயிர் - புதிய ஊக்கம். ஆற்றல் - சக்தி; வல்லமை. ஞாயிறு - சூரியன். தோற்றம் - உதயம். நுகர்ச்சி - அனுபவம்.

### வினாக்கள்

1. "உடலை ஒரு வயலுக்கு ஒப்பிடலாம்'—விளக்குக,

2. ஓய்வு பெறுதல் என்பதன் பொருளை விளக்கமாகக் கூறுக.

3. ஓய்வு பெறுவதன் அவசியம் என்ன ?

4. இளைஞர் ஈடுபடத்தக்க விளையாட்டுக்கள் எவை ?

5. உடற்பயிற்சி விளையாட்டுக்களால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக.

6. "இன்றைய இளைஞரே நாளைய தலைவர்"—விளக்குக.

### பயிற்சி

1. ஆழ்ந்த சிந்தனை. புத்துயிர், மனமும் உடலும், ஆற்றோரம், கொள்ளை கொள்ளும், நெற்றி வியர்வை நிலத்தில் விழ— இத்தொடர்களை யமைத்து வாக்கியம் எழுதுக.

2. உடற்பயிற்சி பற்றிய சில பழமொழிகள் கூறுக.

3. சக்தி, தீவிரம், உதயம், அஸ்தமனம், அனுபவம், சாந்தி- நேரான தமிழ்ப்பதம் தருக.

### இலக்கணம்

**பயிற்சி, விளையாட்டு** என்பவை ஒவ்வொரு தொழிலை (செயலை)க் குறிக்கும் பெயர்கள். இவ்வாறு தொழிலைக் குறிக்கும் பெயர் **தொழிற்பெயர்** எனப்படும்,

ஓடுதல், நடத்தல், படித்தல், பாடுதல்—என்பவை தொழிற் பெயர்களே.

இப்பாடத்திலிருந்து சில தொழிற் பெயர்களை எடுத்தெழுதுக.



## 5. அசோகன் கண்ட அன்பு நெறி

" வீரர்களே ! கலிங்கத்தை நோக்கிக் கடுகுவோம் ; புறப்படுங்கள். அண்டை நாட்டை அடர்க்க வாருங்கள். அருஞ் சமர் விளைப்போம். வெற்றிக் கொடி நாட்டு வோம்" என்று தானைத் தலைவன் கூறிய வீர மொழி களைக் கேட்டு மௌரியரது நால் வகைப் படைகளும் ஊக்கமோடெழுந்தன. வீரர் ஒருவருக்கொருவர் தாம் ஆற்றக் கருதும் தீரச் செயலைக் கூறிக் களித்தனர். படைகள் அணி வகுத்து நிறுத்தப்பட்டன.

காலையில் கதிரவன் எழு முன் முரசங்கள் முழங் கின ; சங்குகள் ஒலித்தன ; கொம்புகள் ஊதின. அவ் வொலிகளுக்கிடையே " அசோகன் வாழ்க" என்ற வாழ்த்தொலி அரண்மனைச் சுவர்களில் பட்டு எதி ரொலித்தது. அசோக சக்கரவர்த்தி பட்டத்தரசியிடம்

விடை பெற்றுக் கொண்டு யானை மீதேறிச் சேனைகளுக்கு நடுவே சென்றான். பின்னர் நால் வகைப் படைகளும் அசோகனைச் சூழ்ந்து அணி வகுத்து நின்றன. அரசனுடைய ஆணையின்பேரில் படை முழுதும் கலிங்க நாட்டை நோக்கிப் புறப்பட்டது.

அசோகனுடைய படைகள் கலிங்க நாட்டை நெருங்கின. அப்படையின் வருகையைப்பற்றி யறியாத அந்நாட்டினர் நடு நடுங்கினர். படைகள் நெருங்கி வருவதைக் கண்ட காவலர்கள் ஓடோடிச் சென்று அச்செய்தியை அரசனுக்கு அறிவித்தனர். கலிங்க வேந்தன் கலங்கினானல்லன்; திகைப்புற்றான். என் செய்வது? அயலரசன் படை கொண்டு வந்து தங்கள் நாட்டைத் தாக்கும்போது, வாளாவிருத்தல் எங்ஙனம்? கலிங்கப் படையும் திரண்டது. நால் வகைப் படைகளும் நாட்டின் எல்லைக்கு அனுப்பப் பெற்றன.

இரு பக்கங்களிலும் சங்குகள் ஒலித்தன. இரு தரப்பிலும் முதன்மையான வீரர்கள் சண்டையிடத் தொடங்கினர். இச்சண்டை முற்றும்போது சேனைகள் முழுவதும் போரில் புகுந்தன. தேர்ப் படை தேர்ப் படைகளோடும், யானைப்படை யானைப்படைகளோடும் குதிரைப் படை குதிரைப் படைகளோடும் காலாட் படை காலாட் படைகளோடும் போர் புரிந்தன.

பல வீரர்கள் தங்களுடைய தலையை யிழந்தார்கள். தலையற்ற உடலங்கள் தரையிற் சாய்ந்து துடித்தன. துணை வந்த சிற்றரசர்களும் சண்டையில் புகுந்தனர். இரத்த வெள்ளத்திலே வெண் கொற்றக் குடைகள் நுரை போன்று மிதந்தன. இறந்து போன பரி, கரிகளின் உடல்கள் ஆற்றின் கரையைப் போல குருதி வெள்ளத்தின் இரு பக்கத்திலும் விழுந்திருந்தன. சில

வீரர்கள் நேரே சென்று யானைப் படையோடு போர் செய்தனர். அப்போரில் யானைகளுடைய தந்தங்கள் தம் மார்பில் பதிவதைக்கண்டு அவ்வீரர்கள் எல்லையில்லாத மகிழ்ச்சி கொண்டனர்.

கையிலிருந்த ஆயுதத்தை இழந்த வீரர் தமது மார்பில் தைத்த அம்பினைப் பறித்து, அதைப் பகைவர்கள் மீது ஏவினார்கள். அசோகனே வாளொடு வெங்களத்திற் புகுந்து படைஞர் பலரைக் கொன்று குவித்தான். கலிங்க வீரர்கள் புறங்காட்டாது தம் தாய் நாட்டிற்காக உயிர் நீத்தனர். கலிங்க மன்னன் கைது செய்யப்பட்டான். எங்கும் இரத்த வெள்ளம்! கண்டவிடமெல்லாம் ஒரே பிணக்காடு! இவ்வாறு காட்சி யளித்தது போர்க்களம்.

ஆ! என்னகொடுமை! அசோகன் பார்த்தான் இக்காட்சியை. அவனுடைய மனம் வெதும்பிற்று கையிலிருந்த வாளை வீசி எறிந்தான். கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகிற்று. "இனி மேல் என்ன நேரிட்டாலும் போர் செய்யேன். எண்ணற்ற மக்களைக் கொன்று குவித்து வெற்றி யடைதல் உண்மையான வெற்றியாகாது. **மக்களின் மனத்தை வெற்றி கொள்வதே உண்மையான வெற்றியாகும்**" என்ற நல்லறிவு அவன் உள்ளத்தில் உதித்தது. தன் படைகளோடும் நாட்டை நோக்கித் திரும்பினான். அன்று முதல் "பிறருக்கு எவ்வித இன்னலும் விளைப்பதில்லை. இயன்றால் என்னாலான உதவியைச் செய்வேன்" என்ற விரதம் பூண்டான் அசோகன்.

**அரும்பதவுரை**

கடுகுதல் - விரைந்து செல்லுதல். கலிங்கம் - வட இந்தியாவிலிருந்த ஒரு நாடு (இப்பொழுதுள்ள ஒரிஸா), அடர்க்க - தாக்க.

சமர் - போர். அணி வகுத்து - வரிசைப்படுத்தி. ஆற்ற - செய்ய. தரப்பு - பிரிவு. வெங்களம் - கொடிய போர்க்களம்.

### வினாக்கள்

1. அசோகன் படைகள் கலிங்கத்தை நோக்கி எவ்வாறு புறப்பட்டன ?
2. போர் வந்ததை யறிந்த கலிங்கர் என்ன செய்தனர் ?
3. போர் நிகழ்ச்சி எவ்வாறிருந்தது ?
4. போர்க்களம் எவ்விதமான காட்சி யளித்தது ?
5. போரின் முடிவில் அசோகன் அடைந்த நல்லறிவு யாது?
6. நால் வகைப் படைகள் எவை ?

### பயிற்சி

1. அணி வகுத்து, ஓடோடிச் சென்று, வாளாவிருத்தல், தாரை தாரையாக—வாக்கியங்களில் பொருத்துக.

2. போர், சேனை, தரப்பு, குதிரை, இரத்தம், யானை—இவற்றிற்கு வேறு பெயர் தருக.

### இலக்கணம்

ஏதேனும் ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் **பெயர்ச் சொல்** எனப்படும். அது தமிழில் ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

1. யானை, குதிரை, அம்பு—என்பவை **பொருட் பெயர்.**
2. கலிங்கம், போர்க்களம்—என்பவை **இடப் பெயர்.**
3. காலை, பகல், மாலை, இரவு—என்பவை **காலப் பெயர்.**
4. தலை, கை, கால்—என்பவை **சினைப் பெயர்.** (சினை உறுப்பு.)
5. வெம்மை, கொடுமை, நன்மை—என்பவை **பண்புப் பெயர்.** (பண்பு - குணம்.)
6. வருகை, அடைதல்—என்பவை **தொழிற்பெயர்.** (தொழிற் பெயரைப்பற்றி முன் பாடத்தில் விளக்கப்பட்டது.)

இந்த உதாரணப் பெயர்கள் இப்பாடத்தில் வந்துள்ளதைக் கண்டறிக.



# 6. நாடும் நகரமும்

நாடு என்னும் பெயர் மக்கள் தேடாத வளமுடையது எனப் பொருள்படும். அதாவது தன்னிடம் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டியவை யாவும் நிரம்பப் பெற்றதாகும். தமிழர் நாடு முன்னளில் வளம் நிரம்பியதாகி, முப்பெரும் பிரிவுகளை யுடைத்தாயிருந்தது. அப்பிரிவுகள் முறையே சேர, சோழ, பாண்டிய நாடுகளாம். மேல் நாடாகிய சேர நாட்டைச் சேர வேந்தரும், கீழ் நாடாகிய சோணாட்டைச் சோழ மன்னரும், தென்னடாகிய பாண்டிய நாட்டைப் பாண்டியரும் ஆண்டு வந்தனர். இந்நாடுகளைப் பற்றிய வரலாறுகள் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் நிரம்பக் காணப்படுகின்றன. 'வேழமுடைத்து மலைநாடு' 'சோழ வள நாடு சோறுடைத்து' 'பாண்டி நன்னடு முத்துடைத்து' என்று ஔவையார் இந்நாடுகளின் செல்வச் சிறப்பைக் கூறியுள்ளார்.

முன்னளில் பெரும் நிலப் பரப்பைக் குறித்து வந்த நாடு' என்னும் பெயர் பிற்காலத்தில் நாட்டின் பிரிவு

களுக்கும் வழங்கலாயிற்று. முரப்பு நாடு, வல்ல நாடு, கொர நாடு, கானுடு, தென்னவ நாடு, தொன்னுடு போன்ற பெயர்கள் இப்பிரிவுகளைக் குறிப்பனவே யாகும்.

பெரிய ஊர்கள் நகரம் என்னும் பெயரால் வழங்கும். நகரம் என்ற சொல்லே சில சமயங்களில் நகர் எனவும் திரிந்து வழங்குதல் உண்டு. ஒரு நாட்டின் தலை சிறந்த பேரூர் அந்நாட்டின் தலை நகரம் எனப்படும். அவ்வாறு தலைமைபெருத ஆழ்வார் திரு



நகரி, திருவாலித் திருநகரி, விளைநகர், விருதுநகர், விண்ணகர் போன்ற ஊர்கள் நகர் எனப் பெயர் பெற்றதும் உண்டு. முன்னர் சிற்றூர்களாயிருந்து, கைத்தொழில் வாணிகம் முதலியவற்ருல் நகரம் என்னும் பெயர்பெற்ற இடங்களும் உண்டு.

தற்காலத்தில் தோன்றும் புதிய ஊர்களும் நகரம் என்று பெரும்பாலும் அழைக்கப்படுகின்றன. சென்னைக்

கருகே தோன்றியுள்ள தியாகராய நகரமும், ஷெனுய் நகரமும், காந்தி நகரமும் இதற்குத்தக்க சான்றுகளாம்.

மனிதருக்கிருப்பது போலவே நாடு நகரங்களுக்கும் வாழ்வு, தாழ்வு உண்டு. முன்னுளில் சீரும் சிறப்பு முற்று விளங்கிய பல நகரங்கள் இப்பொழுது கேட்பா ரற்றுச் சிற்றூர்களாகக் கிடக்கின்றன. முன்னுளில் கேட்பாரற்றுக் கிடந்த பல சிற்றூர்கள் ஏதோ காரணத் தால் சிறப்புற்றுப் பெரு நகரங்களாகத் திகழ்கின்றன. பண்டைக் காலத்திலே நிகரற்று விளங்கிய உறையூர், திருவாரூர், வஞ்சிமாநகர், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய நகரங்கள் இன்று உருக்குலேந்து சீரழிந்து நிற்கின்றன. அவற்றின் பண்டைப் பெருமையைக் காண சரித்திரத்தின் உதவியையும் இலக்கியத்தின் உதவியை யும் நாட வேண்டியிருக்கிறது. திரிசிராப்பள்ளி, திரு நெல்வேலி, சென்னைபோன்ற தற்காலப் பெரு நகரங்கள் பல முன்னுளில் சிற்றூர்களாயிருந்தவை. அவற்றுள் சில பெரியோரது பிறப்பினுலும், சில வாணிபத்தா லும் இன்னுஞ் சில போக்கு வரவு சாதனங்களாலும் பெருமையடைந்து சுற்றுப் புறங்களிலுள்ள மக்களைத் தம்மிடத்தழைத்தன. இங்ஙனம் மக்கள் திரண்டு சென்று குடியேறியதால் அவை நாளடைவில் பெரு நகரங்களாக மாறின.

இக்காலத்தில் தமிழ் நாட்டின் தலை சிறந்த நகர மாகத் திகழ்வது சென்னைமா நகரமாகும். பதினேழாம் நூற்றுண்டுவரை சென்னை ஒரு சிற்றூராகத்தான் இருந்தது. அந்நாளில் அங்கிருந்த மக்களில் பெரும் பாலோர் மீன் பிடிப்பவர்கள்தான். மயிலையும் திரு வல்லிக்கேணியும் கடற்கரைச் சிற்றூர்களாக விளங்கின. ஆனுல் மயிலையிலுள்ள கபாலீச்சுரமும் திருவல்லிக்கேணி

யிலுள்ள திருக்கோயிலும் மிகப் பழமை வாய்ந்தவை. இவ்விரு கோயில்களைத் தவிர சென்னைக்கு வேறு சிறப்பு முன்னாளில் இல்லை. நாளடைவில் அயல்நாட்டு வணிகர் வந்து குடியேறியமையின் சென்னை வளர ஆரம்பித்தது. கிழக்கிந்தியக் கம்பெனியார் சென்னையில் வந்து குடியேறினர். பின்னர், ஒரு நாயகருக்கு உரியதாயிருந்த இந்த இடத்தை விலைக்கு வாங்கி அவ்விடத்தில் ஒரு கோட்டையைக் கட்டினர். அதுதான் தற்போது 'ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை' எனப் பெயர் பெற்றுள்ளது. அதில் தற்போது சென்னை சர்க்காரின் தலைமையான காரியாலயங்கள் அமைந்துள்ளன.

இக்கோட்டை யமைந்துள்ள இடத்தைக் கம்பெனியாருக்கு வழங்கியவருடைய தந்தையின் பெயர் சென்னப்ப நாயகர் என்பது. ஆகவே தாங்கள் வாழ்ந்து வந்த பகுதிக்குச் **சென்னைப் பட்டினம்** என்று கம்பெனியார் பெயரிட்டனர். கோட்டை கட்ட, வாணிபம் வளர, கோட்டையைச்சுற்றிப் பல சிற்றூர்கள் தோன்றலாயின. இங்ஙனம் தோன்றிய ஊர்கள் பேட்டைகளென்றும்,பாக்கங்களென்றும், ஊர்களென்றும் வழங்கின. இதற்குச் சான்றாகத் தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை, இராயப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை ஆகிய பேட்டைகளையும் சேப்பாக்கம், கோடம்பாக்கம், கீழ்ப்பாக்கம் ஆகிய பாக்கங்களையும் எழுமூர் போன்ற ஊர்களையும் கூறலாம். இவையாவும் இன்று சென்னைமா நகரத்தின் பகுதிகளாயுள்ளன.

### அரும்பதவுரை

வேழம் - யானை. சீர் - பெருமை. தலை சிறந்த - உடம்பிற்குத் தலை சிறந்திருப்பது போலச் சிறப்புடைய. திகழ்வது - விளங்குவது. மயிலை - மயிலாப்பூர். கபாலீச்சுரம் - கபாலீசுவரர் எழுந்தருளியுள்ள கோயில். பாக்கம் - கடற்கரையிலுள்ள ஊர்.

### வினாக்கள்

1. நாடு என்னும் பெயரின் பொருள் என்ன ?
2. சேர, சோழ, பாண்டிய நாடுகளின் செல்வ வளத்தை ஔவையார் எவ்வாறு சிறப்பித்துள்ளார் ?
3. நாடு எனப் பெயர் வழங்கும் சில ஊர்களைக் கூறுக.
4. நகர், நகரம் எனப் பெயருள்ள சில ஊர்களைக் குறிப்பிடுக.
5. பண்டைக் காலத்தில் சிறப்புற்றிருந்த சில நகரங்களைத் தெரிவிக்க.
6. வணிகத்தால் பெரு நகரங்களாகிய இடங்களில் இரண்டு கூறுக.
7. சென்னை பெரு நகரமான விதத்தை விளக்கிக் கூறுக.

### பயிற்சி

1. வாழ்வுத்தாழ்வு, போக்குவரவு, பண்டைப் பெருமை, சீரும் சிறப்பும், முப்பெரும் பிரிவு, உருக்குலைந்து — வாக்கியங்களில் அமைக்க.
2. சிற்றூர், பிற்காலம், பெரும்பான்மை, பெருமை — எதிர்ப்பதம் கூறுக.
3. சிறு + ஊர், முன் + நாள், பின் + காலம், பேர் + ஊர், தன் + காலம், சிறப்பு + உற்று, கடல் + கரை — இவைகளைச் சேர்த்து எழுதுக.

### இலக்கணம்

இந்தப் பாடத்தில் பல பெயர்ச் சொற்கள் பயின்று வந்திருப்பதைக் கவனியுங்கள். நாடு, ஊர், சோழன், முதலானவை பெயர்ச் சொற்கள்.

ஒரு பெயர்ச் சொல்லால் அறியப்படவேண்டிய பொருள்கள் நான்கு- அவை **திணை, பால், எண், இடம்,** என்பவை.

1. **திணை** என்பது வகுப்பு அல்லது பிரிவு. அது **உயர் திணை, அஃறிணை** என இரண்டு வகைப்படும். மக்களும், தேவரும், நரகரும் உயர்திணை. மற்ற உயிருள்ள பொருள்களும் உயிரில்லாத பொருள்களும் அஃறிணை. (உயர்திணை - உயர்ந்த பிரிவு. பகுத்தறிவு உள்ளதால் உயர்திணை. அல் + திணை = அஃறிணை. அதாவது உயர்வு அல்லாத பிரிவு. ஆடு, மாடு, மரம், கல் முதலியவை அஃறிணைப் பொருள்கள்.

இந்தப் பாடத்திலிருந்து உயர்திணை, அஃறிணைப் பெயர்களுக்குச் சில உதாரணம் தருக.

---



## 7. பூமியின் கதை

நான் ஒரு கிரகம். எங்கள் குடும்பம் பெரிது. நான் சூரியனைச் சுற்றி வருகின்றேன். நான் செல்லும் பாதை நீளவட்ட வடிவானது. நான் எப்படி சூரியனைச் சுற்றி வருகிறேனோ அதுபோலவே, சந்திரன் என்னைச் சுற்றி வருகிறான். என்னைப்போல இன்னும் பல கிரகங்கள் இருக்கின்றன. சந்திரன் என்னுதவியை நாடி வாழ்வதால் என்னுடைய உபகிரகம் என்று அவன் அழைக்கப்படுகிறான். அதுபோலவே மற்றக் கிரகங்களுக்கும் உபகிரகங்கள் உள. சூரியனும் கிரகங்களும் உபகிரகங்களும் நானும் சேர்ந்து ஒரு குடும்ப வாழ்க்கை நடத்தி வருகிறோம். இக்குடும்பத்தையே '**சூரிய ஒழுங்கு**' என்று வானநூலோர் அழைக்கின்றனர். சூரியனே எங்கள் தந்தை போலுள்ளான்.

இராக் காலங்களில் வானவெளியை உற்றுப்பாருங்கள் எத்தனை நட்சத்திரங்கள் காணப்படுகின்றன!

ஆயினும் அவற்றில் சிலவே என் சகோதரர்களான கிரகங்கள் எங்களுக்கும் என்ன வேற்றுமை தெரியுமா? நட்சத்திரங்கள் மின்னுகின்றன; பொறி தட்டுகின்றன. அப்படி மின்னுதல் இல்லாதவை தான் கிரகங்கள்.

நட்சத்திரங்கள் கிரகங்களைவிடப் பல்லாயிரமடங்கு பெரியவை. ஆனால் மக்களுக்கு அண்மைலிருப்பதால் கிரகங்கள் மிகப் பெரியனவாகவும், வெகு தொலைவி லிருப்பதால் உருக்கள் மிகச் சிறியனவாகவும் தோன்று கின்றன. ஆகவே, உருவின் அளவைக்கொண்டு வானத் திலுள்ள ஓர் ஒளிப்புள்ளியை நட்சத்திரமா அல்லது கிரகமா என்று கண்டறிய இயலாது.

சூரியனுடைய ஒளி எங்கள் மேல் படுகிறது. அந்தச் சூரிய ஒளியில் நாங்கள் ஒளிருகிறோம். ஆகவே, எங்களுக்குச் சுய ஒளி சூரியனால் எங்கள் மேல் வீசப் படுகிறது. ஆனால் உண்மையான நட்சத்திரம் ஒவ் வொன்றும் சூரியனைப் போன்றது; பிறருதவியின்றித் தானே பிரகாசிக்கும் சக்தியுடையது. நட்சத்திரங்க ளெல்லாம் மிக வெப்பமானவை; ஓயாமல் எரிந்து கொண்டேயிருப்பவை. நான் பிறந்ததும் வளர்ந்ததும் எவ்வாறு என்று கேட்கிறீர்களா?

முதலில் நானும் என் சகோதரர்களும் சூரிய னுடைய பகுதிகளாயிருந்தோம். சூரியன் அப்பொழு தும் வெப்பம் மிக்க ஒரு சுடர்ப் பிழம்பாகவே இருந் தான். எக்காரணம் பற்றியோ நானும் என் சகோ தரர்களுமாய்ச் சேர்ந்து சூரியனுடன் இனி இருத்தல் இயலாதென்றும், அதனால் நாங்கள் தனியே விலகிச் சென்று விடவேண்டும் என்றும் முடிவு செய்தோம். அவ்வாறே அவனிடமிருந்து விலகிக் காற்றில் பறந்து போனோம். ஆனாலும் தந்தை போன்ற சூரியனிடம்

எங்களுக்கிருந்த பற்று எங்களை அவனுடன் பின்பும் பிணைக்க வைத்தது; அவனிடமிருந்து அறவே விலகி நிற்க எங்களால் முடியாமற் போயிற்று.

அதனால் அவனைச் சுற்றிவர ஆரம்பித்தோம். இங்ஙனம் எங்களைச் செயற்படுத்தும் விசைக்குப் **புவிக்கவர்ச்சி** என்று பெயர். இந்தக் கவர்ச்சி எங்களை மாத்திரம் கட்டுப்படுத்துவதொன்று அன்று. எந்தச் சிறிய பொருளும் அதற்கு அருகாமையிலுள்ள பெரிய பொருளால் இம்மாதிரி கவரப்படுகிறது. இக்கவர்ச்சியாலே தான் மேலே எறியப்படும் பொருள்கள் மீண்டும் பூமியில் வந்து சேருகின்றன.

நாங்கள் சூரியனிடமிருந்து பிரிந்து போகும்போது என் அனற்பதம் எவ்வளவு இருந்திருக்கும் என்பது உங்களால் எண்ணவும் முடியாததே! என்னை நாற்புறமும் சூடான வாயுக்களும் ஆவிகளும் சூழ்ந்துகொண்டிருந்தன. பிறகு காலஞ்செல்லச் செல்ல, என் அனற்பதம் குறைந்து, தற்போதிய நிலையை அடைந்தேன். சூரியனுடைய அனற்பதமும் குறைந்து வருகிறது. ஆனால் அது என்னைப்போலக் குளிர் நிலையடைய இன்னும் பலகோடி வருடங்கள் செல்லும். நான் சூரியனை விட்டுப் பிரிந்து சென்ற காலத்து என் நிலப்பரப்பில் தாவரங்களோ மனிதர்களோ இல்லை. எனது தீவிர சூட்டினால் அவற்றின் உயிர் வாழ்க்கை இயலாது போய்விட்டது.

நான் எப்படிச் சூரியனிடமிருந்து பிரிந்தேனோ, அதுபோலவே சந்திரன் என்னிடமிருந்து பிரிந்தது. இப்பொழுது பசிபிக் மகாசமுத்திரம் இருக்கிற இடத்தில் தான் சந்திரன் இருந்ததாக நினைக்கிறேன். அது எழுந்து போய்விட்டதும், என் குளிர்ச்சியினால் காற்றில் இருந்த

நீராவியெல்லாம் சுருங்கிச் செறிந்து மழையாகப் பெய்யவே, அம் மழைநீர் சந்திரனைப்போலவே வேறு உபகிரகங்களும் என்னைவிட்டுச் சென்றதனால் உண்டான இடங்களை நிரப்பியது. இந்த நீர்ப்பரப்புக்களையே கடல்களென்றும் சமுத்திரங்களென்றும் பெயரிட்டு அழைக்கிறீர்கள். இவ்வாறு என்னிடமிருந்த நிலப்பரப்பும் அதைச் சூழ்ந்திருந்த நிலப்பரப்பும் குளிர்ந்தவுடனே உயிரினங்கள் அவற்றில் வாழத்தொடங்கின.

இப்பொழுதும் என் புறப்பரப்பு குளிர்ச்சியடைந்திருக்கிறதே தவிர, என் உட்புறம் சூடாகவேயிருந்து வருகிறது. ஒரு சுரங்கத்திற்குள் செல்லச் செல்ல சூடு அதிகரிப்பதை இன்றுங் காண்கிறீர்கள் அல்லவா! அப்படியே இன்னும் பல நூறு மைல்கள் ஆழத்தில் நீங்கள் செல்வீர்களானால் அங்கே தரைப்பரப்பு முழுவதும் சிவக்கக் காய்ந்திருக்கக் காண்பீர்கள். சந்திரன் என்னைவிட மிகச் சிறியது. அதனால் அது மிக விரைவில் குளிர்ந்து போய்விட்டது. அதை இப்பொழுது ‘தண்மதி’ யென்றும், அதன் ஒளியைத் ‘தண் ஒளி’ என்றும் அழைக்கிறீர்கள்.

### அரும்பதவுரை

ஒளிறுகிறோம் - பிரகாசிக்கிறோம். பிழம்பு - திரட்சி. பற்று - அன்பு. தண்மதி - குளிர்ந்த சந்திரன்.

### வினாக்கள்

1. சூரிய ஒழுங்கு என்று எதற்குப் பெயர்?

2. கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

3. சூரியனுக்கும் மற்றக் கிரகங்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

4. பூமி தனது வரலாற்றை எவ்வாறு கூறுகிறது?

5. புவிக்கவர்ச்சி என்று எதற்குப் பெயர்?

6. கடல்களும் சமுத்திரங்களும் எப்படி உண்டாயின?

7. பூமியின் உட்பாகம் எப்படியிருக்கும்? எவ்வாறு அதை அறியலாம்.

### பயிற்சி

1. புறப்பரப்பு, குளிர்ச்சி, வேற்றுமை, அருகாமை—எதிர்ப்பதம் தருக.

2. என் + உதவி' கண்டு + அறிய, சூழ்ந்து + இருந்த, உயிர் + இனங்கள் — சேர்த்து எழுதுக.

3. சந்திரன், நட்சத்திரம், சூரியன் — வேறு பெயர் உரைக்க.

### இலக்கணம்

**பால்** என்பது திணையின் உட்பிரிவு, உயர்திணையில்—**ஆண்பால், பெண்பால், பலர்பால்** என்னும் மூன்று உட்பிரிவு உண்டு. தந்தை, அரசன், அண்ணன்—இவை ஆண்பால் பெயர்கள். தாய், அரசி, தங்கை—இவை பெண்பால் பெயர்கள். தந்தைமார், தாய்மார், தங்கைமார்—இவை பலர்பாற் பெயர்கள்.

அஃறிணையில் **ஒன்றன்பால், பலவின்பால்** என்னும் இரண்டே பால்கள் உண்டு.

ஓர் அஃறிணைப் பொருளைக் குறிப்பது ஒன்றன்பால் :—மரம், மாடு, கல்.

ஒன்றுக்கு மேற்பட்ட அஃறிணைப் பொருளைக் குறிப்பது பலவின்பால் :—மரங்கள், மாடுகள், கற்கள்.

பலர்பாலுக்கும் பலவின்பாலுக்கும் என்ன வேற்றுமை என்று கண்டுபிடி.

---



## 8. முதற் கடமை யாரிடத்து?

"தன்னுயிர் தானறப் பெற்றுனை ஏனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்"

என்னுந் தமிழ் மறைக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்த காந்தியடிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா? அவர்தம் சுற்றுப் பிரயாணத்தின்போது ஒரூரில் தங்கி யிருந்தார்; அங்கு ஒரே மாதிரியான உடையணிந்த சிறுவர்கள் கூடி யிருந்ததைக் கண்டார். அவர்களைப் பார்த்ததும் அவருக்கு முதலில் எழுந்த எண்ணம் என்ன என்பது தெரியுமா? அவர்களணிந்திருந்த உடை அயல் நாட்டுத் துணியால் தைக்கப்பட்டிருக்கின்றதே என்ற எண்ணத்தில் அடிகள் ஆழ்ந்தார். உடனே அவர்களை யணுகி அவர் பேசத் தொடங்கினர்.

**காந்தியடிகள்:** இம்மாதிரி ஒரே உடையை அணிவதன் கருத்து யாது?

**சிறுவர்கள் :** நாங்கள் சாரண இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். இவ்வியக்கத்தைச் சேர்ந்த அனைவரும் இவ்விதமே உடையணிந்தாக வேண்டும்.

**காந்தியடிகள் :** உங்கள் இயக்கத்தின் குறிக்கோள் என்ன ?

**சிறுவர்கள் :** நாங்கள் கடவுள், அரசர், நாடு ஆகிய இம்மூன்றினுக்கும் சேவை புரிய வாழ்கிறோம்.

**காந்தியடிகள் :** உங்களுடைய அரசர் யார் ?

**சிறுவர்கள் :** ஜார்ஜ் மன்னர்.

**காந்தியடிகள் :** 'ஜலியன்வாலா'வைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? 1919-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி இந்திய சரித்திரத்தில் ஒரு புனித நாள். அன்று பஞ்சாப் மாகாணத்திலுள்ள 'ஜலியன் வாலாபாக்' என்ற இடத்தில் இந்தியர்கள் ஆங்கில அதிகாரிகளால் படுகொலை செய்யப்பட்டனர். அந்நாளன்று நீங்கள் ஜலின்யவாலாபாக்கில் இருந்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும் தெரியுமா? உயிருக்குப் பயந்து வெளியே ஓட முயலும் இந்தியர்களைச் சுட்டுக் கொல்லும்படி **ஜெனரல் டையர்** உங்களுக்கு உத்தரவிட்டிருப்பான். அப்போது நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் ?

**சிறுவர்கள் :** நாங்கள் அவன் கட்டளைக்கு கீழ்ப்படிந்திருக்கமாட்டோம்.

**காந்தியடிகள் :** ஆனல் ஜெனரல் டையர் உங்கள் அரசனுக்குப் பதிலாக அல்லவா அங்கே நின்று உங்களுக்குக் கட்டளையிடுகிறன் ?

**சிறுவர்கள் :** ஆம், ஆனல் அவன் அதிகார வெறி பிடித்தவன் அவனுக்கு நாங்கள் இணங்கி யிருக்கமாட்டோம்.

**காந்தியடிகள்:** அரசனையும் அதிகாரத்தையும் பிரிக்க முடியாது. அவை ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையன. 'அரசன்' என்பது ஒரு தனி மனிதனைக் குறிக்குஞ் சொல்லன்று; ஆங்கில அதிகார வர்க்கத்தையே குறிக்குஞ் சொல்லாகும். ஆகவே, ஓர் இந்தியன் ஆங்கில அரசுக்கு விசுவாசமாக இருந்துகொண்டு, அதே சமயத்தில் கடவுளிடத்தும் விசுவாசமாக இருக்க முடியாது. ஆங்கில அதிகாரம் கடவுளை மறந்து தீச்செயல்கள் புரிந்து வருகிறதே.

இவ்விதம் காந்தியடிகள் பேசக்கேட்ட சிறுவர்கள் சிறிது திகைத்து நின்ருர்கள். அவர் மேலும் சொல்லத் தொடங்கினர். "நம் நாடு, கடவுளுக்கு ஒவ்வாத செயல்களில் ஈடுபட்டால், நாம் கடவுளுக்காக நாட்டைப் புறக்கணிக்க வேண்டாமா? ஆதலில் நான் சொல்லும் வழியைச் சற்றுக் கேளுங்கள். கடவுளிடத்து விசுவாசமாயிருத்தல் என்பது ஒன்றையே குறிக்கோளாக கொள்ள வேண்டும். மற்றெதுவும் அதற்கு அடுத்தபடியாகத் தான் கருதத்தக்கது,"

மனித சமூகம் உய்வதற்கான வழி ஒன்றேயாகும். அரசுப்பற்று, நாட்டுப்பற்று, சமூகப்பற்று ஆகிய யாவையும் வேண்டற்பாலனவே. ஆயினும், கடவுளிடத்து நாம் கொண்டுள்ள பற்றுக்கு இடையூறு ஏற்படாதவரை இவற்றையெல்லாம் வளர்க்கவேண்டும். ஆனல் எப்பொழுதேனும் இவை கடவுட்பற்றுக்கு முரண்படுமானல், அவற்றை உதறித் தள்ளவேண்டும்.

உலகம் உய்வதற்குக் காந்தியண்ணல் காட்டியுள்ள வழி ஒன்றே. அதுதான் அன்பு நெறி என்பது. அன்பின்றேல் உய்வில்லை. "உன் முழு இருதயத்துடனும்,

முழு ஆத்மாவுடனும், முழு மனத்துடனும், முழு சக்தியுடனும் ஆண்டவனை வழிபடுவாயாக. அடுத்து நிற்போனை உன்னைப்போலவே கருதி நேசிப்பாயாக" என்று **இயேசுநாதர்** அருளிய பொன்மொழிகளைச் சிந்தித்துப் பாருங்கள். அம்மொழிகளை அங்ஙனமே தம் வாழ்க்கையில் காந்தியடிகள் நடத்திக் காட்டினாரன்றோ ?

வாழ்க்கையின் குறிக்கோள் கடவுள் பற்றாக அமையவேண்டும். அதையடைய நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழி 'அன்புநெறி' யாகும். அன்புநெறியில் நடந்து செல்லும்போது, இடையூறாக வரும் எதையும் நாம் ஒதுக்கித் தள்ளவேண்டும். இதுவே காந்தியடிகள் காட்டிய நல்வழி.

" ஆண்டவனே அனைத்தும்: அன்பே அவன்நெறி."

இதனைக் கடைப்பிடித் தொழுகுவோர் மேன்மையடைவர்.

### அரும்பதவுரை

**திருக்குறள் :** தன் உயிர் - தனது உயிரை, தான்அறப்பெற்றானை - தவம் முதலிய சிறந்த கடமைகளைச் செய்வதற்கு உரியதாகக் கொண்டு பிறர்க்கு உழைப்பவனை, ஏனைய - மற்ற, மன்னுயிர் எல்லாம் தொழும் - நிலைபெற்ற உயிர்கள் யாவும் வணங்கும்.

அணுகி - நெருங்கி. குறிக்கோள் - நோக்கம். கொள்கை. இணங்கி - இசைந்து. புறக்கணிக்க - ஒதுக்கித்தள்ள. வேண்டற்பாலன - விரும்பத்தக்கவை. முரண் - விரோதம். அண்ணல் - ஆடவரில் சிறந்தவன். உய்வு - பிழைக்கும் வழி. மறை - வேதம்.

### வினாக்கள்

1. காந்தியடிகளின் எந்த வினாவிற்கு விடைகூற இயலாது சிறுவர் திகைத்தனர் ? ஏன் ?

2. ஜலியன் வாலா படுகொலையைப்பற்றி நீவிர் அறிவது யாது?

3. வேண்டற்பாலனவாகிய பற்றுக்கள் எவை? அவற்றுள் சிறந்தது எது?

4. இயேசுநாதர் அருளிய பொன்மொழிகள் எவை?

5. வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ளத்தக்கது எது?

## பயிற்சி

1. தன்னுயிர், ஒரூர், நேர்ந்திருக்கும், சொல்லன்று, அன்பின்றேல்—**பிரித்து எழுதுக.** (உ-ம். தன் + உயிர்)

2. அதிகாரத்திமிர், திகைத்து நின்றார்கள், புறக்கணிக்க, குறிக்கோள், வேண்டற்பாலன—**வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

3. ஒவ்வாத, அயல்நாடு, இணங்கி, கீழ்ப்படிய - **எதிர்ப் பதம் தருக.**

## இலக்கணம்

**எண்** என்பது பொருளின் எண்ணிக்கை. அது இருதிணைக்கும் பொதுவானது. எண் - **ஒருமை, பன்மை** என இருவகைப் படும்.

ஒன்றைக் குறிப்பது ஒருமை—அரசன், மரம், பலகை.

ஒன்றுக்கு மேற்பட்டவைகளைக் குறிப்பது பன்மை—அரசர்கள், மரங்கள், பலகைகள்.

இந்தப் பாடத்திலிருந்து சில ஒருமைப் பெயர்களையும் சில பன்மைப் பெயர்களையும் எழுதுக.

## 9. மாமல்லபுரம்

செங்கற்பட்டிலிருந்து கிழக்கு நோக்கிய பாதையில் ஒன்பது மைல் தூரத்தில் '**திருக்கழுக்குன்றம்**' என்ற திருப்பதி உள்ளது. அங்கேயுள்ள மலையுச்சியில் வேதகிரீசுவரர் கோயில் அமைந்திருக்கிறது. அக்கோயிலுக்கருகே ஒரு பாறையுள்ளது. அதன்மீது நாடோறும் நடுப்பகல் பன்னிரண்டு மணிக்கு முன்னால் நிவேதித்த உணவு வைக்கப்படுகிறது. உடனே இரு பறவை (கழுகு)கள் வந்து அவ்வுணவை அருந்திச் செல்கின்றன. இக்காட்சி பல நூற்றாண்டுகளாக நடந்துவருகிறது. ஐந்நாறு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அங்கு வந்து இக்காட்சியைப் பார்த்த டச்சு யாத்ரீகர் பலர் இச்செய்தியை அங்குள்ள பாறைகளில் பொறித்து வைத்திருக்கின்றனர். இது தவிர அம்மலையடிவாரத்தில் மூவர்கோயில் ஒன்று அமைந்திருக்கிறது.

திருக்கழுக்குன்றத்திலிருந்து கிழக்கே ஒன்பது மைல் தூரத்தில் கடற்கரை யோரத்தில் மாமல்லபுரம் என்னும் சிற்றூர் அமைந்திருக்கிறது. இவ்வூருக்குப் பழங்காலத்தில் வழங்கிய பெயர் 'மல்லை' யென்பது. இவ்வூருக்குச் சென்னையிலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் மூலமாகப் படகுகளிலேறிச் செல்வதற்கும் வசதியுண்டு.

**மாமல்லன்** என்பது **முதலாம் நரசிம்மவர்மன்** என்ற பல்லவ மன்னவனுடைய சிறப்புப் பெயராகும். மல்லை பல்லவர்களுக்கு முக்கிய துறைமுகப்பட்டினமாக இருந்தது. குகைக் கோயில்களையும் கற்சிற்பங்களையும் அமைத்து அவ்வூரைப் பெருமைப்படுத்தியவன் மாமல்லன். ஆதலின் அது பிற்காலத்தே மாமல்லபுரம் என வழங்கலாயிற்று.

கி. பி. ஆறும் நூற்றுண்டு வரை பல்லவ அரசர்கள் எல்லோரும் சமண மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். முதன் முதலாக சமண சமயத்தை விட்டுச் சைவ சமயத்தைப் பின்பற்றிய பல்லவன் **மகேந்திரன்** என்பவனுவான். அப்பர் சுவாமிகளின் உபதேசத்தால் மகேந்திரன் சைவ சமயத்தைத் தழுவினுன் என்பது வரலாறு. தென்னிந்தியாவில் முதன் முதலாக குகைக் கோயில்களைக் கட்டத் தொடங்கியவன் மகேந்திரனேயாவான்.

குகைக் கோயிலென்றுல் என்ன ? ஒரு மலையிலோ பாறையிலோ குகைகள் அமைந்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு இயற்கையாகக் குகையில்லாது போயினும் ஒரு பாறையில் குடைந்து ஒரு குகையை அமைக்க முடியும். இவ்வாறு ஒரு குகையை அமைத்துப் பின் அதைச் சிற்பங்களால் அழகுபடுத்தினுல் அதே ஒரு கோயிலாக மாறும். அதனுள் பூசைக்குரிய சிலையை நிறுவினுல் குகைக் கோயில் முற்றுப் பெறும். இவ்வாறு குகைக் கோயில்களை அமைப்பது ஓர் அருங் கலை.

மாமல்லபுரத்தில் எங்குப் பார்த்தாலும் குகைக் கோயில்கள் காணப்படுகின்றன. ஆயினும் அவற்றுள் தலை சிறந்த கலைக்களஞ்சியம் ' பஞ்ச பாண்டவ இரதங்கள் ' என வழங்கப்படும் ஐந்து குகைக் கோயில்களேயாகும்.

பல்லவர் காலத்தில் இங்கு ஏழு குகைக் கோயில்கள் சிறப்புற்று விளங்கின. பிற்காலத்தில் அவற்றுள் இரண்டு கடலால் கொள்ளப்பட்டன. எஞ்சிய ஐந்து கோயில்களைத் தான் நாம் இன்று காண்கிறேம். முற்காலத்தில் ஏழு கோயில்களிருந்த காரணத்தால்

மாமல்லபுரத்து 'ஏழு பகோடாக்கள்' என்று சொல்லப் பட்டு வந்தது. இன்னும் அப்பெயர் அதற்கு வழங்கு கிறது. ஆயின் நாம் இன்று காண்பது ஐந்து இரதங் களே. அவற்றைத்தான் நாம் 'பஞ்ச பாண்டவ இரதங் கள்' என்று அழைக்கிறோம்.



இவ்வைந்து கற்கோயில்களில் ஒவ்வொன்றும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. இவை முறையே தருமன், வீமன், அருச்சுனன், சகாதேவன், திரௌபதி ஆகியோர் பெயரால் அழைக்கப்படுகின்றன. நகுல னும் சகாதேவனும் இரட்டைப் பிள்ளைகள் அல்லவா? ஆதலால், அவ்விருவருக்கும் சேர்ந்து ஒரே கோயில் அமைந்தது போலும்.

இவற்றுள் தனி யழகுடன் பொலிவது திரௌபதி இரதமாகும். அதன் மேற்பரப்பு மிகவும் சிறியது. கிராமங்களில் குடிசைகளின் மேற்கூரை வைக்கோல் போட்டு மூடப்பட்டிருக்குமல்லவா? அது போலவே அமைந்துள்ளது இந்த ரதத்தின் மேல் பரப்பு. இதன்

கீழ் பரப்பு சதுர வடிவமானது ; மேல் பரப்பு வளைந்தது. இது காண்போரை வியக்கச் செய்யும் அழகுடன் விளங்குகிறது.

இதற்கு அடுத்தாற்போல் தென் திசையில் உள்ளது தருமன் இரதம். இதன் உச்சியில் அறுபக்க வடிவமான மண்டபம் ஒன்றிருக்கிறது. இந்த இரதத்தில் பல கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. இதற்கடுத்தாற்போல் தென்திசையிலுள்ளது வீமன் இரதம். இதன் மேல் கோபுரம் வளைந்து நீண்ட உருளை வடிவிலிருக்கிறது. இதன் விமானம் புத்த விஹாரங்களின் விமானத்தை ஒத்திருக்கிறது. வீமன் இரதத்திற்கு அடுத்தது அருச்சுனன் இரதம். இதன் கோபுரம் உச்சியில்லாத கூருருளை வடிவமானது. இவற்றிற்கு மேற்கே தனியாக அமைந்துள்ளது சகாதேவன் இரதம். இதன் அமைப்பு வீமன் இரதத்தை ஒத்திருக்கிறது.

பாண்டவ இரதங்களின் அருகில் யானை, குதிரை, சிங்கம், இடபம் ஆகிய பிராணிகளின் உருவங்கள் காட்சியளிக்கின்றன. அவற்றைத் தொலைவிலிருந்து காண்பவர் உயிருள்ள பிராணிகளாகவே மதிப்பர். இவ்வூரின் கண் ஒரு திருமால் கோயில் உள்ளது. அதற்குப் பின்புறமுள்ள பாறைகளில் பேரழகு வாய்ந்த சில சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அருச்சுனன் தவம் புரியும் காட்சி, கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாய்த் தாங்கும் காட்சி, மகிஷாசுர வதம், வராகாவதாரம் ஆகியவை முதன்மையானவை. இவற்றைக் கண்ணால் கண்டு களிக்க இயலுமேயன்றிச் சொற்களால் வருணித்தல் இயலாத காரியமாகும்.

கடற்கரையோரத்தில் ஒரு பண்டைய கோயில் உள்ளது. அதில் ஒரு பகுதியில் சிவலிங்கமும் மற்றொரு

பகுதியில் திருமாலின் பெரிய சிலையும் கவனிப்பாரற்ற நிலையில் இருக்கின்றன. அச்சிவலிங்கம் பன்னிரண்டு பட்டைகள் உடையதாயும் பாதிக்கு மேல் தகர்த்து எறியப்பட்டும் உள்ளது. கோயிலைச் சுற்றியுள்ள சிறு பாறுங்கற்களில் பல உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

இவையேயன்றி, அவ்வூரின் மேற்புறமுள்ள சிறு குன்றுகளில் பல குகைக் கோயில்களும் சிற்பங்களும் உள்ளன. அவையனைத்தும் அழகு நிறைந்த கலைக் கோயில்களாகத் திகழ்கின்றன. இவ்வாறாக மாமல்ல புரத்தில் எங்கே பார்த்தாலும் குகைக் கோயில்களும், ஒரே கல்லில் செதுக்கிய கோயில்களும், புடைப்புச் சித்திரங்களும் சிற்பங்களும் காட்சியளிக்கின்றன. ஆதலால், மாமல்லபுரத்தை ஒரு 'கலைப்பெருங்கோயில்' என்று கூறுவது மிகப் பொருத்தமல்லவா ?

### அரும்பதவுரை

திருப்பதி - சிறந்த இடம். கிரி - மலை. பொறித்து - பதித்து. மூவர் - பிரம்மா, விஷ்ணு, சிவன். வரலாறு - சரித்திரம். கலைக் களஞ்சியம் - கலைகள் சேர்ந்திருக்கும் இடம். எஞ்சிய - மிச்சமான. பகோடா - கோபுரம். பொலிவது - விளங்குவது. கல் வெட்டு - கல்லில் செதுக்கி எழுதப்பட்டவை. இடபம் - காளை (மாடு).

### வினாக்கள்

1. திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் இவை எங்கேயுள்ளன ?
2. திருக்கழுக்குன்றத்தின் சிறப்பு யாது ?
3. மாமல்லபுரம் என்று பெயர் வழங்கக் காரணமென்ன ?
4. மாமல்லன் என்பது யாருக்கு வழங்கிய சிறப்புப் பெயர்?
5. மாமல்லனைப்பற்றிய வரலாற்றுச் செய்தி யாது ?
6. குகைக் கோயில் என்றால் என்ன ?

7. மாமல்லபுரத்தில் காணப்படும் குகைக் கோயில்களின் அமைப்பு, அழகு இவற்றை விவரிக்க.

8. திருமால் கோயிலின் பின்புறமுள்ள பாறைகளில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களுள் முதன்மையானவை எவை?

**பயிற்சி**

1. கிரி, மதம், கோயில், கலை, இடபம், யானை—வேறு பெயர் தருக.

2. மலையுச்சி, பன்னிரண்டு, நாடோறும், கற்சிற்பம், நூற்றுண்டு—பிரித்து எழுதுக.

3. மேற்பரப்பு, பேரழகு, அருங்கலை, துறைமுகப்பட்டினம், முற்றுப்பெறும்—வாக்கியங்களில் அமைக்க.

4. மகாபலிபுரத்திலுள்ள கற்கோயில்கள், சிற்பங்கள் இவற்றின் படங்களைச் சேகரிக்கவும்.

5. மாமல்லபுரத்தைப்போலவே பெயர் பெற்ற வேறு இரண்டிடங்கள் நம் நாட்டில் உள்ளன. அவற்றைப்பற்றி விசாரித்துத் தெரிந்து ஐந்தைந்து வரியில் எழுதுக.

**இலக்கணம்**

பெயர்ச் சொல்லில் அறிய வேண்டிய திணை, பால், எண் என்னும் மூன்றையும் பற்றி முன் பாடங்களில் அறிந்தீர்கள். இனி, மற்றென்றாகிய **இடம்** என்பது யாது? இடமாவது சொற்கள் வழங்கும் ஸ்தானம். அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

1 **நான்** இன்று ஊருக்கும் போவேன்.—இதில் 'நான்' என்பது பேசுபவனைக் குறிக்கிறது. அது **தன்மையிடத்தில்** வழங்கும் சொல்.

2. **நீ** நாளை என்னுடன் வருவாயா?—இதில் 'நீ' என்பது பேசுபவனுக்கு முன் நிற்பவனைக் குறிக்கிறது. அது **முன்னிலை** இடத்துச் சொல்.

8. **இராமன்** பாடம் படிக்கிறான்.—இதில் 'இராமன்' என்பது பேசுகிறவனையோ, அவனுக்கு முன் நிற்பவனையோ குறிக்கவில்லை. இவர்களல்லாத மற்றொருவனைக் குறிக்கிறது. அது **படர்க்கை** இடத்துச் சொல்லாகும்.

---

# 10. புனிதவதியார்

சோழ நாட்டில் வளங்களாற் சிறந்த காரைக்கால் என்னும் திருப்பதி ஒன்றுண்டு. வணிகர் மரபினரான **தனதத்தன்** என்ற சிவனடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தாம் செய்த நல்வினைப் பயனால் ஒரு பெண் குழந்தையை அடைந்தார். அக்குழந்தைக்கு அவர் **புனிதவதி** என்று பெயரிட்டார். புனிதவதியார் சிவபெருமானிடத்து மிகுந்த அன்பு கொண்டு பக்தி செய்துவந்தார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த புனிதவதியார் மணம் புரிந்துகொள்ளத் தக்க வயதை எய்தினார். அச்சமயம் நாகப்பட்டினத்தில் நிதிபதி என்னும் பெயருள்ள வணிகரின் புதல்வராகிய **பரமதத்தன்** என்பவர் மிகுந்த செல்வத்துடன் வாழ்ந்து வந்தார். அவரைத் தம் பெண்ணுக்குத் தகுந்த மணமகனாகத் தனதத்தன் தேர்ந்தெடுத்தார். மணவினையும் இனிது நிறைவேறியது.

புனிதவதியார் கற்புநெறியுடன் தம் கணவரோடு இல்லற வாழ்க்கை நடத்தி வந்தார். பரமதத்தன் சிவ பக்தியுள்ளவர்; தம் இல்லத்திற்கு வரும் சிவனடியார்களுக்கு அமுதுபடைத்து, அவர்கள் வேண்டும் பொருள்களை வழங்கி, நல்வாழ்வு நடத்திவந்தார். ஒருநாள் அவரைக் காண ஒருவன் வந்தான். அவன், இரண்டு மாங்கனிகளைப் பரமதத்தனிடம் கொண்டுவந்து கொடுத்தான். அவர் அவற்றை வாங்கித் தம் மனைவியாரிடத்தில் கொடுக்கும்படி ஓராளிடம் கொடுத்தனுப்பினார். அம்மையாரும் தம் கணவர் சொற்படியே கனிகளை வாங்கி வைத்திருந்தார்.

அப்போது புனிதவதியாரின் வீட்டிற்கு ஒரு சிவனடியார் வந்து சேர்ந்தார். அவர் மிகுந்த பசியோடிருக்கிறார் என்பதை அம்மையார் கண்டுகொண்டு அன்பொடு அமுது படைத்தார். ஆனால், காய், கறி வகைகள் எதுவும் அச்சமயத்தில் இல்லை. ஆதலால், தம் கணவர் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றைச் சிவனடியாருக்குப் படைத்தார். அவரும் வயிறார உண்டு புனிதவதியாருக்கு ஆசி கூறிச் சென்றார்.

பின்னர், பரமதத்தன் வந்து நீராடி, சிவபூசை முதலியவற்றை முடித்துக்கொண்டு அமுதுண்ண அமர்ந்தார். புனிதவதியார் எஞ்சியிருந்த ஒரு மாங்கனியைத் தம் கணவனின் கலத்தில் படைத்தார். அவர் அப்பழத்தை உண்டு மகிழ்ந்தார்; அது மிகவும் சுவையுள்ளதாக இருந்ததால் மற்றொரு கனியையும் கொண்டு வரும்படி தன் மனைவியாருக்குப் பணித்தார்.

உடனே அம்மையார் உள்ளே சென்றார்; யாது செய்வதெனத் தெரியாமல் திகைத்து மனம் வருந்திப் பின் இருகரங்களையும் குவித்துச் சிவபெருமானை வேண்டினார்; ஆண்டவன் அருளால் ஒரு மாங்கனி தன் கையில் வந்திருக்கக் கண்ட புனிதவதியார் மட்டிலா மகிழ்ச்சியடைந்தார். அக்கனியைக் கொணர்ந்து தம் கணவரது பரிகலத்தில் இட்டார். அதையுண்ட வணிகர் "இது மிகவும் இனிப்பாக இருக்கிறதே! இது ஏது? இது முன்படைத்த கனிபோன்றது அன்றே?" என்று வினவினார். கணவருக்கு மறைத்துச் சொல்வது கற்புநிலைக்குத் தகாது என்று எண்ணிய அம்மையார் நடந்ததைச் சிறிதும் ஒளிக்காமல் சொன்னார். கணவனார் இதை நம்பவில்லை. "இறைவனருள் இவ்வளவு எளிதில் உனக்குக் கிட்டுமாயின், இன்னுமொரு கனி

கொண்டுவா, பார்ப்போம்'' எனக் கேட்டார். அம்மையார் முன்போலவே உள்ளே சென்று இறைவனை இறைஞ்சி நிற்க, ஒரு மாங்கனி அவர் கையில் வந்து நின்றது. அதைக் கொணர்ந்து தம் கணவருக்குத் தந்தார் அம்மையார். அவர் வாங்கிக்கொண்ட அளவில் அக்கனி அவர் கையிலிருந்து மறைந்து போயிற்று.

இந்த நிகழ்ச்சியைக் கண்ட பரமதத்தன் பயந்தார்; அம்மையாரைத் தெய்வமாக எண்ணினர்; 'இனி இவர் பணிவிடை செய்ய, நாம் அதை ஏற்றுக் கொள்ளுதல் முறைமையன்று. இவ்விடம் விட்டு உடனே நான் நீங்க வேண்டும்' என உறுதிபூண்டார். தாம் தனியே சென்று வர்த்தகஞ் செய்து வருவதாகக் கூறி, ஒரு கப்பலில் பண்டங்களை ஏற்றிக்கொண்டு, வெளிநாட்டுக்குப் புறப்பட்டார். அங்குச் சென்று வாணிபஞ் செய்து மிகுந்த பொருள் ஈட்டினர்; பின்னர் பாண்டி நாட்டை யடைந்து ஒரு பட்டினத்தில் குடியேறினர். அங்கே தங்கள் குலத்திற்கு ஒத்தவளாகிய ஒரு பெண்மணியை மணஞ் செய்துகொண்டு வாழ்ந்தார். அவ்விருவருக்கும் ஒரு பெண்மகவு பிறந்தது. அதற்கு அவர் புனிதவதியார் என்று பெயரிட்டார்.

பரமதத்தன் இவ்வாறிருக்கும் செய்தியை தனதத்தன் கேள்விப்பட்டார்; புனிதவதியாரைச் சிவிகையிலேற்றிக் கொண்டு தம் உறவினர் சிலருடன் பரமதத்தன் வாழ்ந்த இடத்தை அடைந்தார்; பரமதத்தர் இருப்பிடம் அடைந்து தம் வரவைத் தெரிவித்தார். அதைக் கேட்ட பரமதத்தன் தம் இரண்டாவது மனைவியையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு, தாமே வந்து எதிர்கொண்டார். மேலும் அவ்விருவரையும் புனிதவதியாரை வணங்கச் சொல்லித் தாமும் தரையில்

விழுந்து அவரைத் தொழுதார். அதைக் கண்ட அம்மையார் அஞ்சித் தம் சுற்றத்தார்பால் ஒதுங்கி நின்றார். அந்தச் சுறறத்தார் பரமதத்தரை நோக்கி "நீர் இவ்வாறு தகுதியற்ற காரியத்தை ஏன் செய்தீர்?" என்று வினவினர்.

அதற்குப் பரமதத்தர் "இவ்வம்மையார் வெறும் மானிடரல்லர். இவரை உண்மையான தெய்வமென்று யான் அறிந்தேன். ஆகையால் இவர் பணிவிடைசெய்ய, நான் ஏற்றுக் கொள்ளுதல் தகாதெனக் கருதியே இவரை விட்டுப் பிரிந்தேன்" என்று விடையளித்தார். கூடியிருந்த பலரும் திகைத்து நின்றார்கள்.

உடனே அம்மையார் சிவபெருமானை மனத்தில் நினைந்து "அத்தனே, என் கணவரின் பொருட்டு நான் அழகு பொருந்திய இந்த ஊனுடம்பைத் தாங்கிக் கொண்டிருந்தேன். இனி அதனை ஒழித்து எனக்குத் தவ வடிவம் அருளவேண்டும்" என்று துதித்தார். மறுகணத்தில் அம்மையார் அவ்வுருவம் பெற்றார்; அப்பொழுதே **அற்புதத் திருவந்தாதி, இரட்டைமணிமாலை** என்னும் சிறு நூல்களை அருளிச் செய்தார்.

பின்னர் கயிலாயத்தைக் காண வேண்டுமென்னும் ஆவல் மிகுதியால், கயிலையை நோக்கி அம்மையார் நடந்து சென்றார். இவருடைய வடிவத்தைக் கண்ட உமைபிராட்டியார் சிவபிரானை நோக்கி "நம்மை நோக்கி நடந்து வருவது யார்?" என வினவினார். அதற்குச் சிவனார் "வரும் இவர் நம்மைப் போற்றும் அம்மை" என்று சொல்லி, "அம்மையே! வா" என்று புனிதவதியாரை அழைத்தார். அம்மையார் சிவபெருமானை அணுகி, அவர் திருவடி தொழுது, "உம்மைப் பாடல் ஓதித் துதிக்கவும் எப்போதும் உமது திருக்கூத்

துக்காணவும் அருள்செய்ய வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தார். "அவ்வாருயின் திருவாலங்காட்டிற்குச் சென்று எமது திருக்கூத்துக் கண்டு மகிழ்ந்திரு" என்று இறைவன் அருள் செய்தார்.

### அரும்பதவுரை

நல்வினை - நல்ல காரியங்கள். எய்தினர் - அடைந்தார். மணவினை - விவாகம். வயிருர - வயிறு நிரம்ப. கலம் - உண்ணும் இலை. பணித்தார் - கட்டளையிட்டார். மட்டிலா - குறைவில்லாத. பரிகலம் - உண்ணும் பாத்திரம் அல்லது இலை. ஈட்டினர்-தேடினர். மகவு - குழந்தை. சிவிகை - பல்லக்கு. அத்தன் - அடியாரைக் காப்பவன். ஊனுடம்பு - மாமிச உடம்பு.

### வினக்கள்

1 காரைக்கால் எங்கே இருக்கிறது? இப்பொழுது அது யாருடைய ஆட்சியிலுள்ளது ?

2. புனிதவதியார் சிவனடியாரை எவ்வாறு உபசரித்தார் ?

3. சிவபெருமான் புனிதவதியாருக்கு மாங்கனியருளியது எப்பொழுது ?

4. பரமதத்தன் புனிதவதியாரை விட்டுப் பிரியக் காரணம் என்ன ?

5. புனிதவதியாரைப் பிரிந்த பரமதத்தன் என்னசெய்தான்?

6. "நீர் இவ்வாறு தகுதியற்ற காரியத்தை ஏன் செய்தீர்?" இந்த வாக்கியம் வந்துள்ள இடத்தைக் குறிப்பிட்டு விளக்குக.

7. புனிதவதியார் தவக்கோலம் கொள்ளக் காரணம் என்ன?

8. புனிதவதியார் பாடிய நூல்கள் எவை ?

9. சிவபெருமான் புனிதவதியாருக்கு எவ்வாறு அருள் புரிந்தார் ?

### பயிற்சி

1. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, மறைத்துச் சொல்வது, பணிவிடை, உறுதிபூண்டார், ஈட்டினர், எதிர்கொண்டார்—வாக்கியங்களில் பொருத்தி எழுதுக.

2. ஓரான், பசியோடிருக்கிருர், வயிருர, அமுதுண்ண, மட்டிலா, இன்னுமொரு—பதம் பிரித்தெழுதுக.

### இலக்கணம்

"நம்மை நோக்கி வருவது யார்?"—இந்த வாக்கியம் கேள்வி கேட்கும் பொருளில் அமைந்திருக்கிறது? இப்படிப்பட்ட வாக்கியம் **வினவாக்கியம்** எனப்படும்.

வினவாக்கியத்திற்கு ஐந்து உதாரணம் கொடு.

# 11. பழமொழிகள்

சென்னை-600 008.
13532
TB 031 N51

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
அகல உழுவதினும் ஆழ உழு.
அரைக்க அரைக்கச் சந்தனம் கமழும்.
அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா ?
ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்கலாகாதா ?

ஆட்டெரு அந்த வருடம், மாட்டெரு மறு வருடம்.
ஆடிப் பட்டம் தேடி விதை.
ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின் மேல் கண்.
ஈட்டி எட்டியவரைபாயும், பணம் பாதாளம்வரைபாயும்.
எறும்பு ஊரக் கல்லுந் தேயும்.

ஏர் நடந்தால் பேர் நடக்கும்.
கரும்பு தின்னக் கூலி வேண்டுமா ?
காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கும்.

தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
நுண்ணிய கருமம் எண்ணித் துணி.
பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே.
பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்.
பாய்ச்சலும் வேண்டும், காய்ச்சலும் வேண்டும்.

பெற்றபிள்ளை காவாவிடினும் வைத்த பிள்ளை காக்கும்.
மேலைக்கு உழுவார் கூலிக்கு அழுவார்.
மேழிச்செல்வம் கோழைப்படாது.
யானைக்கு ஒரு காலம், பூனைக்கு ஒரு காலம்.
வளரும் பயிர் முளையிலே தெரியும்

### அரும்பதவுரை

பழங்காலத்திலிருந்து மக்களிடையே பெரு வழக்காக வழங்கி வரும் வாக்கியங்கள் பழமொழிகள் எனப்படும். பழமொழிகள் யாவும் மக்களுக்கு வாழ்க்கையில் பல துறைகளிலும் நல்வழி காட்டுவனவாகும். அவற்றுள் பொறுக்கியெடுத்த சில சிறந்த பழமொழிகள் இப்பாடத்தில் தரப்பெற்றுள்ளன.

அகம் - மனம். கமழும் - மணம் வீசும். ஆக்க - சமையல் ஆகும் வரை. ஆடிப் பட்டம் - ஆடி மாத மழை. நுண்ணியற் அற்பமான. பாய்ச்சல் - நீர் விடுதல். காய்ச்சல் - வெயிலி - காய்தல். வைத்த பிள்ளை - தென்னம்பிள்ளை. மேழி - கலப்பை.

### பயிற்சி

இவை போன்ற பழமொழிகள் இருபது எழுதுக.

## 12. கோழி வளர்ப்பு

கோழிகளுக்குத் தாயகம் இந்தியா தான். முதன் முதலில் இந்தியாவில் தான் கோழிகள் இருந்தனவென்றும், பின்னர் இங்கிருந்து தான் அவை பிற நாடுகளுக்குச் சென்று பரவின என்றும் நம்ப இடமுண்டு. எக்கால முதல் இந்நாட்டில் கோழிகள் இருந்து வருகின்றனவென்று திட்டமாகக் கூற முடியாது. தமிழர் கண்ட அழகுத் தெய்வம் முருகன். முருகனுக்குக் கொடியாக அமைந்தது கோழி. மிகத் தொன்மை வாய்ந்த தமிழ் நூல்களில் கூடக் கோழியைப்பற்றிய செய்திகள் உள.

முற்காலத்தில் கோழிச் சண்டை, காளைச் சண்டை போன்ற விளையாட்டுக்களில் மக்கள் மிகவும் ஈடுபட்டிருந்தனர். மக்கள், கோழிகளை நன்றாகக் கொழுக்க வைத்து அவற்றிற்குச் சண்டை செய்யக் கற்பிப்பர்.

பிறகு இரண்டு பெரிய கோழிகளைச் சண்டையிட விட்டு நூற்றுக் கணக்கான மக்கள் ஒன்று கூடி அச்சண்டையைக் கண்டு களிப்பர். இதற்கு 'கோழி வென்றி' என்றும் பெயர் வழங்கியது.

இதைத் தவிர இறைச்சிக்காகவும், முட்டைகளுக்காகவும் சிலர் வீட்டில் கோழிகளை வளர்த்து வந்தனர்.



ஆனால் அவற்றிற்கு நல்ல தீனி கொடுத்து அவற்றைச் சரிவரப் பாதுகாப்பதில் மக்கள் ஊக்கங் காட்டவில்லை. குப்பையைக் கொத்திக் கிடைத்ததைத் தின்று வாழும் கோழி எப்படி நோயற்று இருக்க முடியும்? எப்படி நல்ல முட்டைகளை இட இயலும்? ஆகவே, கோழியை வளர்ப்பது ஊதியமில்லாத தொழில் என்று மக்கள் கருதினர். இவ்விதமாகக் கோழி வளர்ப்பு நம் நாட்டில் சீரழிந்து விட்டது. தற்போது இந்நாட்டில் நல்ல பெரிய கோழிப் பண்ணைகள் வெகு சிலவேயுள்ளன.

நம் நாட்டில் குடியானவர்களை நஞ்செய் நிலத்தை நம்பி வாழும் குடியானவர்களென்றும், புஞ்செய் நிலத்தை நம்பி வாழும் குடியானவர்களென்றும், தோட்டத்தை நம்பி வாழும் குடியானவர்களென்றும்

பிரித்துக் கூறலாம். தோட்டங்களை வைத்துக் கொண்டு அவற்றைப் பராமரித்து அவற்றின் மூலம் பெறும் ஊதியத்தால் வாழ்க்கை நடத்துவோர் நம் நாட்டில் பலருளர்.

ஒரு தோட்டக்காரனுக்குப் பல வழிகளில் வருவாய் உண்டு. தானியங்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், பழங்கள், பருத்தி, கரும்பு, புகையிலை, விறகு, கீற்று போன்ற பல பொருள்களை உற்பத்தி செய்து விற்று அவன் வருவாய் அடைகிறான். இது தவிர ஒவ்வொரு தோட்டக்காரனும் ஆடு, மாடு, எருமை, கோழி போன்ற பிராணிகளை வளர்க்கலாம். இதனால் அவனுடைய தோட்ட வேலைக்கும் அனுகூலம் ஏற்படும். அவனுக்கு நல்ல லாபமும் கிடைக்கும். இவ்வாறு சில பிராணிகளை வளர்ப்பதற்கு வேண்டிய இடம், தீனி, ஓய்வு நேரம் போன்ற வசதிகள் யாவும் தோட்டக்காரனுக்கு உண்டு. ஆகவே, ஒவ்வொரு தோட்டக்காரனும் இவ்விதத் தொழில்களைச் சிக்கனமாகச் செய்து நல்ல இலாபம் அடையலாம்.

கோழி வளர்ப்பில் திறம்பட முனைந்து நல்ல இலாபம் காணவேண்டுமானால் பின்வரும் சில நுட்பங்களைச் சரிவர அறியவேண்டும். முதலாவதாக, நம்முடைய சீதோஷ்ண நிலைக்கும் ஏற்ற கோழியினங்கள் எவை எனத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு பண்ணையில் நன்றாக வளரும் கோழியினம் மற்றொரு பண்ணையில் நன்றாக வளராமல் போகக்கூடும். அதனால் பல பண்ணைகளையும் பார்த்து, நாம் வளர்ப்பதற்கேற்ற கோழியினங்களைப் பொறுக்கியெடுத்து அவற்றை வளர்க்க வேண்டும்.

இரண்டாவதாக, நம்மைப்போலவே கோழியும் அதன் குடும்பத்துடன் வாழவேண்டும். ஆகவே, கோழிகள் வளர நல்ல காற்ருேட்டமுள்ள வீடு இன்றியமையாதது. வெயில், காற்று, மழை ஆகியவற்றிலிருந்து அவற்றிற்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியது நமது கடமை. மற்றும் அவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கத் தனியான அறைகள் அமைக்கப்படவேண்டும். இவ்வாறு நல்ல இடவசதிகளை அமைத்துத் தந்தால்தான் கோழிகள் நோயற்று இன்பமாக வாழும்; வளர்ப்பவர்க்கும் நல்ல வருவாய் கிடைக்கும்.



மூன்ருவதாக, மனிதருள் ஆணும் பெண்ணு பொருத்தம் பார்த்து மணந்து கொள்கிருர்களல்லவா? அதுபோலவே, ஒரு பேடையும் இனம், தேகக்கட்டு, அழகு போன்ற பண்புகளில் ஒத்த ஒரு சேவலுடன் தான் வாழ விரும்புகிறது. ஆகவே இப்பண்புகளில் பொருத்தம் பார்த்துப் பின்னர்தான் சேவலையும் பேடையையும் சேர்த்து வைக்கவேண்டும்.

நான்காவதாக, கோழிக்குச் தரும் உணவைப்பற்றி நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உணவு நன்ருக பக்குவமடைந்ததாக இருக்கவேண்டும். கோழிக்கு வேண்டிய அளவு உணவு தரப்படவேண்டுமேயன்றி அதிகமாகவோ மிகக் குறைவாகவோ கொடுத்தல் தவறு. உணவு உட்கொள்வதில் கோழிக்கும் தகுந்த காலவரையறை யுண்டு. இந்த நுட்பங்களை மனத்திற்கொண்டு கோழிகளுக்குத் தீனி தருவது மிக

முக்கியமாகும். ஐந்தாவதாக, நோய்கள் வராமல் கோழிகளைப் பாதுகாக்கவேண்டும்.

இவ்வாறு தக்க கவனத்துடன் கோழி வளர்ப்பை மேற்கொள்ள வேண்டுமானால், நம் நாட்டில் கோழி வளர்ப்பு மிக மேன்மையுறும், கோழி வளர்ப்பு என்பது ஒருகலை. அதைச் சரிவரப் பயின்று பின் மேற்கொள்வோமானால் அது நமது ஓய்வு நேரத்திற்கொத்த ஒரு தொழிலாக அமைவதுடன், நல்ல இலாபமும் தரும். ஆனால் நம் நாட்டின் இயல்புக்கும், ஏழைக் குடியானவனின் பொருளாதார நிலைக்கும் தக்கவாறு கோழி வளர்ப்பு முறையை நாம் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

### அரும்பதவுரை

தாயகம் - தோன்றும் இடம். ஊதியம் - இலாபம். கோழிப் பண்ணை - கோழிகள் நல்ல முறையில் பாதுகாத்து வளர்க்கப் படும் இடம். நன்செய் - நல்ல நெல் முதலானவை விளையும் நீர்வளமுள்ள நிலம். புன்செய் - மழை பெய்தாலொழியப் பயிராகாத நிலம். சிக்கனம் - செட்டு. சூழ்நிலை - சுற்றுப் புறங்களின் தன்மை. பேடை - பெண் பறவை. சேவல்-ஆண் பறவை

### வினாக்கள்

1. இந்தியா கோழிகளுக்குத் தாயகம்—விளக்குக.

2. முற்காலத்தில் கோழிவளர்ப்பு ஒரு சிறந்த தொழிலாகக் கொள்ளப்படாதது ஏன்?

3. நம் நாட்டில் குடியானவர்கள் என்னென்ன தொழில்கள் செய்து வருகிறார்கள்?

4. கோழி போன்றவைகளை வளர்ப்பதில் தோட்ட வேலை செய்யும் குடியானவருக்குள்ள வசதி என்ன?

5. கோழி வவர்ப்பிலுள்ள நுட்பமான முறைகள் எவை?

6. கோழிகள் நன்கு வளர என்னென்ன வசதிகள் செய்ய வேண்டும்?

7. கோழிக்குத் தரப்படும் உணவு வகையைப்பற்றிக் கூறுக.

## பயிற்சி

1. நோயற்று, திறம்பட, திட்டமாக, சூழ்நிலை, காற்றோட்டம், காலவரையறை—நும் சொந்த வாக்கியங்களில் அமைக்க.

2. நன்செய், புன்செய், தோட்டப்பயிர் - ஒவ்வொன்றையும்பற்றி ஐந்தைந்து வாக்கியம் எழுது.

## இலக்கணம்

தமிழர் **கண்ட** அழகுத் தெய்வம் முருகன்.—இந்த வாக்கியத்தைக் கவனியுங்கள். இதில் கண்ட என்பது 'காணுதல்' என்னும் செயலைக்குறிக்குஞ் சொல்லாதலால் அது ஒரு வினைச் சொல். ஆனால் அது 'கண்டான்' என்பதுபோல முற்றுப் பெறாமல், குறைந்து நிற்கிறது; தெய்வம் என்ற சொல்லைத் தழுவி முடிகிறது. இவ்வாறு ஒரு பெயர்ச் சொல்லைக்கொண்டு முடியும் குறைவினைச் சொல் **பெயரெச்சம்** எனப்படும்.

நஞ்சை நிலத்தை நம்பி வாழும் குடியானவர்.
நன்கு வளரும் கோழிகள் நல்ல முட்டைகள் இடும்.
தோட்டப் பயிரைக் கண்காணித்து வருபவர்
பெயரெச்சங்களைக் குறிப்பிடுக.

## 13. கிரேக்கப் பள்ளிகள்

பண்டைய நாளில் உலகம் வியக்குமாறு பண்பாட்டினால் சிறந்து விளங்கிய பெருநாடுகள் கிரேக்க நாடும் இந்தியாவுமேயாகும். கிரேக்க நாட்டின் தலைநகரம் **ஏதென்ஸ்** என்பது. கிரேக்க நாகரிகந்தான் மேற்கு நாடுகளில் தற்போது காணப்படும் எல்லா நாகரிகங்களுக்கும் அடிப்படையானது.

இவ்வாறு தலைசிறந்து நின்ற கிரேக்க நாட்டில் எத்தகைய கல்வி முறை அமைந்திருந்தது என்பதை அறியோம். அவர்கள் குழந்தைக்கு வயது ஆறு ஆனதும், அதைப் பள்ளிக்கு அனுப்பத் தொடங்குவர். ஆரம்பக் கல்வி ஆறு வயதிலிருந்து பதினன்கு வரை புகட்டப்படும். பள்ளியில் உலோகத்தாலான ஒரு கருவியைக்கொண்டு மெழுகலான ஒரு பலகையின் மேல் எழுத்துக்களை எழுதிப் பழகுவார்கள். பிறகு ஆசிரியர் ஒரு பாடத்தைச் சொல்லிக்கொண்டே போவார். அதைக் குழந்தைகள் தங்கள் பலகைகளில் எழுதிக் காட்டுவர்.

மேலும் தேசிய இலக்கியங்களிலிருந்து பெரும் பகுதிகளைக் குழந்தைகள் மனப்பாடஞ் செய்வர். அவற்றை ஆசிரியர் எப்பொழுது கேட்டாலும் தவருமல் ஒப்புவிக்கப் பழகிக் கொள்வார்கள். '**ஹோமர்**' என்ற தேசிய கவியின் கவிதை முழுதும் பாடலாக அமைவதுமுண்டு. பொருள் விளங்காத பாடப் பகுதிகளை ஆசிரியர் விளக்கிச் சொல்வார். பாடங்களைப் பாராமல் ஒப்புவித்தல்தன் பள்ளிக் கல்வியில் முதலிடம் பெற்றிருந்தது. பாடங்கள் ஒப்புவிக்கும்போது சைகைகள் செய்வதுமுண்டு. 'கவிதையென்ருல் அதை

உரக்க ஒப்புவித்தல் போதாது; அதை நடித்துக் காட்டவும் வேண்டும்' என்ற கொள்கை கிரேக்க மக்களிடையே பரவி இருந்தது. எளிய கணக்கு வகைகளும் கற்பிக்கப்பட்டன. கிரேக்கர்களின் எண்முறை மிகவும் கடினமானது. இதற்காகச் சிறு கூழாங்கற்களைக் கொண்டு ஆரம்ப வகுப்புகளில் கணக்குகளைக் கற்பித்தார்கள்.

இசைப் பள்ளிகள் பல அமைக்கப்பட்டிருந்தன. குழல் பெரும் பான்மையோருக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. ஆனால் இக் கருவியைக் கொண்டு உயர்ந்த ஒலிவகைகளை எழுப்புவது கடினம். ஆதலில், அது உயர்தரப் பள்ளிகளுக்கென்று ஒதுக்கிவைக்கப்பட்டது. சாதாரண இசை வகைகளே ஆரம்பப் பள்ளிகளில் கற்றுக்கொடுக்கப்பட்டன.

உயர்தர வகுப்புகளில் **'லையர்'** என்னும் வீணை போன்றதொரு (கம்பிக்) கருவியில் பயிற்சி அளிக்கப்பட்டது. கிரேக்க நாட்டில் பெருவழக்கான இசைக் கருவி 'லையர்' என்பதுதான். தேசியப் பாக்கள் யாவும் பண்ணோடு பாடப்படும். அப்போது மேற்சொன்ன கருவியையும் வாசிப்பார்கள்.

சாதாரணமாக, ஒரு வீட்டுக்கு யாராவது விருந்தினர் வந்தால், உணவருந்தி முடிந்ததும, வந்த விருந்தினர் சில பாடல்களைப் பாடுவது வழக்கமாயிருந்தது. அவ்வேளைகளில் தேசியப் பாக்களே பாடப்பட்டன. 'லையர்' என்ற கருவியுடன் சேர்ந்தே பாடுதல் நிகழும். பரந்த கல்வி என்ற முறையில் வர்ணந் தீட்டுதல், ஓவியம் வரைதல் ஆகிய இரு கலைகளும் பயிலப்பட்டு வந்தன. செல்வமிக்க பெற்றோர்கள் தம் குழந்தைகளுக்கு இவையனைத்திலும் பயிற்சி அளிப்பார்கள்.

இன்னும் உடற்பயிற்சிக்கான **மல்லக சாலைகள்** பல கிரேக்க நாட்டில் அமைந்திருந்தன. உடலும் ஒழுக்கமும் சரிவர வளர உடற் பயிற்சி உதவியளிக்கும் என்பது கிரேக்கரது நம்பிக்கை. உடற்பயிற்சியுள் நாட்டியமும் அடங்கியிருந்தது. குழலின் இசைக்கு ஏற்ப நடனமாடப் பிள்ளைகள் கற்றுக்கொள்வார்கள். இவை தவிர, வேறு எத்தனையோ வகை விளையாட்டுக்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவற்றில் ஆசிரியன் நடு நிலை வகித்து வெற்றியாளரைத் தேர்வது வழக்கம்.

படித்தல், ஒப்புவித்தல், வர்ணந் தீட்டுதல், இசை, பொது அறிவு, உடற்பயிற்சி ஆகிய கலைகளில் போட்டிகள் நடைபெறும். இவற்றில் வெற்றி பெறுவோருக்கு அரசியலார் பரிசு வழங்குவர். அவ்வவ் வூரிலுள்ள கலைக் கழகங்கள் பரிசு அளிப்பதும் உண்டு. இங்ஙனம் இளைஞர்களுக்குப் பயிற்சியில், ஊக்கம் ஊட்டி வந்தார்கள். சிறு பிள்ளைகள் ஊக்கங் குன்றுதிருக்கும்படி அக் கல்வி முறை அமைந்திருந்தது.

ஏறக்குறைய பதினன்கு வயதானதும் ஏழைப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடைய பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு அவர்களையும் தொழில் செய்து பிழைக்க அனுப்புவார்கள். பிள்ளைகளும் கைத்தொழிலோ, வியாபாரமோ செய்து பொருளீட்டத் தலைப்படுவார்கள். செல்வம் பெற்றவர்களானல், தங்கள் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி முடிந்ததும் நான்கு வருடங்களுக்கு உயர்தரக் கல்வியில் பயிற்சி அளிப்பர்.

கிரேக்க நாட்டில் சுயாட்சி நிலவிய காரணத்தால் ஒவ்வொருவனும் தன் முதன்மையை உணர்ந்தான். அதனல், சமூகத்தில் பெருமைப் படைத்தக்கப் பதவிகளைப்

பெற ஒவ்வொருவனும் முயன்முன். இதனுல் முழுக் கல்விக்குத் தேவை அதிகமாயிற்று.

ஆசிரியத் தொழிலில் ஈடுபட்ட வெளிநாட்டு அறிஞர்கள் பலர் ஏதென்ஸ் நகருக்கு அழைத்துவரப்பட்டனர். இங்ஙனம் வந்த ஆசிரியர்களுக்கு **'ஸோபிஸ்டுகள்'** என்ற பெயர் வழங்கிற்று. அவர்கள் கணிதம், தரை நூல், சரித்திரம், திறம்படப் பேசுதல் ஆகிய கலைகளில் தனிச்சிறப்புற்று விளங்கினுர்கள். இவர்கள் ஏதென்ஸ் நகருக்கு வந்தபின், அங்கு இக்கலைகள் விரைவில் பரவலாயின. இவ்வாருக கிரேக்கக் கல்விமுறை உருவாகி, மக்களிடையே கல்வியார்வம், தாமே ஆராய்ந்தறியும் சக்தி, பேச்சுத்திறன் ஆகிய நற்பண்புகளைப் பரவச் செய்தது.

### அரும்பதவுரை

பண்பாடு - நாகரிகம். தேசிய இலக்கியம் - தேசப்பற்றை உண்டாக்கக்கூடிய நூல்கள். கவிதை - பாட்டு. பெருவழக்கான - பிரபலமான. பண் - இராகம். மல்லக சாலைகள் - உடற்பயிற்சிக் கூடங்கள்.

### வினுக்கள்

1. கிரேக்க நாட்டில் ஆரம்பக் கல்வி எவ்வாறு தழைக்கப் பட்டது ?

2. கிரேக்க மாணவர் இசைப் பயிற்சி பெற்ற விதம் யாது?

3. கிரேக்கரின் முக்கிய இசைக் கருவிகள் எவை ?

4. உடற் பயிற்சியில் கிரேக்கர் எவ்வாறு ஊக்கங் காட்டினர் ?

5. கிரேக்கமாணவர் பயின்ற மற்ற கலைகள் எவை ?

6. ஏதென்ஸ் நகருக்கு வந்த வெளிநாட்டு ஆசிரியர்களுக்கு வழங்கிய பெயர் என்ன ? அவர்கள் என்ன கற்பித்தார்கள் ?

## பயிற்சி

1. பண்பாடு, மனப்பாடம், பெரும்பான்மையோர், பெரு வழக்கான, மல்லக சாலைகள், உயர்தரக் கல்வி, பேச்சுத்திறன்—நும் சொந்த வாக்கியங்களில் அமைத்தெழுதுக.

2. நம் நாட்டில் ஆரம்பக்கல்வி கற்பிக்கப்படும் முறையைப் பற்றி நீவிர் அறிந்ததை எழுதுக.

3. உடற்பயிற்சியின் அவசியம்பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

## இலக்கணம்

முன் பாடத்தில் பெயரெச்சத்தைப்பற்றி அறிந்தீர்கள். இந்தப் பாடத்தில் வினையெச்சத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்.

பொருள் **விளங்காத** பாடப் பகுதிகளை ஆசிரியர் **விளக்கிச்** சொல்வார்:—இந்த வாக்கியத்தில் 'விளங்காத' என்னும் குறைவினைச்சொல் பெயரெச்சமாக இருப்பதைக் கவனியுங்கள். 'விளக்கி' என்னும் குறைவினைச் சொல் 'சொல்வார்' என்னும் **வினைமுற்றை**க்கொண்டு முடிகிறது. ஆகையால், அது **வினையெச்சம்** எனப்படும். பெயரெச்சத்திற்கும் வினையெச்சத்திற்குமுள்ள வேற்றுமையைக் கூர்ந்து அறியுங்கள்.

உயர்ந்த ஒலிவகைகள், பள்ளிக்கு அனுப்பத் தொடங்குவர், குழந்தைகள் தங்கள் பலகைகளில் எழுதிக் காட்டுவர், வந்த விருந்தினர், ஆசிரியன் நடுநிலை வகித்து வெற்றியாளரைத் தேர்வது வழக்கம்:—இத் தொடர்களிலுள்ள பெயரெச்ச வினையெச்சங்களைக் குறிப்பிடுக.

# 14. குடிசைத் தொழில்கள்

ஏறத்தாழ ஏழு இலட்சம் சிற்றூர்களைக் கொண்டது நமது நாடு. இருந்தும், பொருளாதாரத் துறையிலும், சமூகப் போக்கிலும் மிகவும் சீர்கேடான நிலையில்தான் நாம் இன்று வாழ்கிறோம். கடந்த முந்நூறு ஆண்டுகளாக நம் செல்வத்தைச் சுரண்டிச்சென்றனர் அன்னியர். அவர்கள் வெறும் பானையையும் அகப்பையையும்தான் நமக்கு விட்டுச் சென்றனர். ஆதலின், நாம் மீண்டும் உணவைக் காண வேண்டுமாயின் உழைப்புவேண்டும்.

ஆங்கிலேயர் ஆட்சியில் குடிசைக்கைத்தொழில்கள் இயந்திரத் தொழில்களாக மாற்றப்பட்டன. நிலங்களில் விளையும் புகையிலை, சணல், பருத்தி போன்ற பொருள்கள் பெரிய ஆலைகளுக்கு அனுப்பப்பட்டன. இதனால் குடிசைத் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் குறைந்தன. மூலப் பொருள்களின் குறைவால் மக்களுக்கு இன்றியமையாத பொருள்கள் கிடைப்பதில் முட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால், பொருள்களின் விலை உயர்ந்தது.

ஆலைகளில் நெய்யப்பட்ட துணி வனப்பாயும் விலை குறைந்ததாயும் இமிருந்தது. அதனால், மக்கள் அதனை விரும்பி வாங்கினர். இருப்பினும் அவ்வகைப் பொருள்கள் உழைப்புத் தன்மை குறைந்தவை. ஆனால், குறைந்த விலைக்குக் கிடைத்ததால் மக்கள் ஆலைப் பொருள்களை வாங்கினர். குடிசைப் பொருள்களை வாங்குவோர் அருகிப் போயினர்.

பெரிய ஆலைகள் நகரங்களில் ஏற்படுத்தப்பட்டன. சிற்றூர்களில் வாழ்ந்த தொழிலாளர்கள் நகரங்களுக்குச் சென்றனர். குடிசைத் தொழிலில் கிடைப்பதைவிட அதிகக் கூலி கொடுத்து ஆலைகள் தொழிலாளர்களை

நகரங்களுக்கு இழுத்தன. ஆகவே, சிற்றூர்களின் செல்வ நிலை சிதையலாயிற்று. குடிசைத் தொழிலின் சிறப்பு



குன்றியது. வேளாண்மைக்குச் ஆளில்லாது போகவே, அதுவும் சீர் குலைந்தது. நகரங்களுக்குச் சென்ற ஏழை



கள் அங்கும் நல் வாழ்க்கை நடத்த இயலவில்லை. பலர் பட்டினியால் மடிகின்றனர்; வேலை கிடைக்காமல் பலர் அலைகின்றனர்.

குடிசைத் தொழில்கள் சிற்றூர்களில் வாழும் மக்களின் நிலைக்கும், அங்குக் கிடைக்கும் மூலப்பொருள்களுக்கும் தகுந்தவையாயிருக்க வேண்டும். பருத்தியைக் கொண்டு நூல் நூற்றல், கைத்தறியால் துணி நெய்தல், புகையிலையைக் கொண்டு சுருட்டு, வாசனைப் புகையிலை, பொடி முதலியவை செய்தல், கரும்பைக் கொண்டு கருப்பஞ்சாறு, வெல்லம், சர்க்கரை முதலியவை செய்தல் ஆகிய யாவும் விவசாயத்துடன் தொடர்புடைய குடிசைத் தொழில்களேயாம். ஆகவே விவசாயம் மிகுந்த இடங்களில் இத்தொழில்களைத் தொடங்கலாம்.



காடுகளில் அமைந்த சிறு குடியிருப்புக்களிலும் காடுகளுக்கு அருகிலமைந்துள்ள ஊர்களிலும் மக்கள் ஆடு, மாடுகளை வளர்த்து அவற்றைக் கொண்டு பால், தயிர், வெண்ணெய் தயாரித்து விற்பது, கம்பளம் நெய்வது போன்ற தொழில்களை நடத்தலாம். தென்னை, பனை போன்ற மரங்கள் நிறைந்த இடங்களில் வாழ்வோர் கயிறு பின்னுதல், கூடை முடைதல், பாய் பின்னுதல், விரிப்புகள் செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபடலாம். கடலோரத்தில் வாழும் மக்களுக்கு இவை சிறந்த துணைத் தொழில்களாக அமையும். சோப்பு செய்தல், தீக்குச்சி செய்தல் போன்ற விஞ்ஞான முறையைக் கொண்ட சில தொழில்கள் நகரங்களில் நடைபெறலாம்.

இவ்வாறு குடிசைத் தொழில்களை ஏற்படுத்துவதில் கூட்டுறவு முறையைக் கையாள வேண்டும். டென்மார்க், ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் குடிசைத் தொழில்கள் யாவும் கூட்டுறவு முறையில் தான் நடைபெறுகின்றன. இத் தொழில்களில் ஈடுபட விரும்பும் ஏழைகளுக்குத் தொழிற் பயிற்சியும் பண உதவியும் அளிப்பது அரசாங்கத்தின் கடமை. மேலும் செல்வம் படைத்த எவரேனும் இத்தகைய தொழில் களைத் தொடங்க விரும்பினுல் அவருக்கு அரசாங்கத் தார் போதிய ஊக்கமளிக்க வேண்டும்.

இங்ஙனமாகக் குடிசைத் தொழில்களுக்கு முதன்மை யளித்தாலன்றி நம் நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்திருத்த முடியாது. குடிசைத் தொழில்களால் பல ருக்கு வேலை கிடைக்கும். நாளடைவில் குறைந்த விலைக் குச் சிறந்த பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்யலாம். நம் நாட்டு மக்களின் செல்வ நிலை வளரும். இக்கருத்துக் களை யெல்லாம் உளத்திற் கொண்டுதான் காந்தியடிகள் "கைராட்டை"யை உயர்வாக மதித்தார் போலும்! கிராமக் கைத்தொழில்களின் குறியாக நிற்பது கைராட் டினமாகும்.

வேலையில்லாது தவிப்போருக்கு வேலை கொடுத் தும், வருடத்தில் சுமார் ஐந்துமாதங்கள் வேலையில்லாது காலங் கழிக்கும் குடியானவனுக்குத் துணைத் தொழி லாக இருந்தும் குடிசைத் தொழில் நன்மை பயக்க வல்லது. எனவே இவற்றை நாடெங்கும் பரவச் செய்து ஆதரிப்பது நம் கடமை.

### அரும்பதவுரை

முட்டுப்பாடு - குறைபாடு. குடியிருப்பு - மிகச் சிறிய ஊர். அருகி - குறைந்து. வனப்பு - அழகு. போதிய - வேண்டிய அளவு. ஆலைகள் - இயந்திரங்களைக் கொண்டு கைத்தொழில் நடைபெறும் இடங்கள்.

## வினாக்கள்

1. செல்வ நிலையில் நம் நாடு வறண்டு போகக் காரணம் என்ன ?

2. குடிசைத் தொழில்கள் எவ்வாறு சீரழிந்தன ?

3. தொழிலாளர்கள் கிராமங்களை விட்டு நகரங்களுக்கு வரக் காரணம் என்ன ?

4. நம் நாட்டில் தொன்று தொட்டு நடைபெற்று வந்த குடிசைத் தொழில்கள் எவை?

5. தொழில்கள் நன்கு நடைபெற எத்தகைய வசதிகள் அமைய வேண்டும் ?

6. குடிசைத் தொழில்களின் வளர்ச்சிக்கு யாவருடைய உதவி இன்றியமையாதது ?

## பயிற்சி

1. முந்நூறு, தொழிற் பயிற்சி, பொருளாதார நிலை, தொடர்புடைய, குடியிருப்பு - நும் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. பின் பிரும் வாக்கியங்களில் இந்தத் தொடர்களில் பொருத்தமானதை அமைக்க.—

இன்றியமையாத, முட்டுப்பாடு, வனப்பு, கயிறு பின்னுதல், தீக்குச்சி செய்தல், குறியாக.

(1) கிராமக் கைத் தொழில்களின்———நிற்பது கைராட்டினமாகும்.

(2) தொழில் வளர்ச்சிக்குப் பொருளுதவியும் ஊக்கமும் அளிப்பது அரசாங்கத்தின்————கடமை.

(3) விஞ்ஞான முறையால் நடை பெறக் கூடிய சிறு தொழில்————.

(4) பொருள்————ஏற்பட்டால் எந்தத் தொழிலும் ஓங்காது.

(5) தென்னை மிகுந்துள்ள இடங்களில்————எளிதாக நடைபெறக் கூடியது.

(6) ஆலையில் நெய்யப்பட்ட ஆடைகள்———மிகுந்தவையாக இருக்கும்.

## 15. எட்வர்ட் ஜென்னர்

எட்வர்ட் ஜென்னர் என்ற பெரியார் இங்கிலாந்தி லுள்ள '**பேர்கலி**' என்ற ஊரிற்பிறந்தவர். அவருடைய தந்தையாரான ஸ்டீபன் ஜென்னர் என்பவர் எட்வர்டுக்கு ஆறு வயது முடியு முன்னரே உயிர்நீத்தார். அது முதல் எட்வர்ட் தம் மூத்த சகோதரருடைய ஆதரவிலேயே வாழ்ந்து வந்தார். சிறு வயதிலிருந்தே எட்வர்டுக்கு ஏழை மக்களிடம் இரக்கமுண்டு.

ஜென்னர் இளைஞராயிருந்தபோது 'ஸாட்பரி' என்ற இடத்திலிருந்த மருத்துவக் கல்லூரியில் படித்து வந்தார். பெரியம்மையால் துன்பப்படும் நோயாளிகள் பலரை அவர் காண நேர்ந்தது. ஆகவே, அந்தக் கொடு நோய்க்கு ஒரு மருந்து தேட வேண்டுமென்ற அவா அவருக்குண்டாயிற்று. ஒரு நாள் ஒரு குடியானப் பெண் அவரிடம் வந்து மருந்து தருமாறு கேட்டாள். அப்பெண் பெரியம்மையால் அவதிப்படுகிறாளோ என்னவோ என்று சிறிது சிந்தித்தார். ஜென்னர் சில நிமிடங்கள் கழித்து அந்தப் பெண் "ஏன் மருந்து கொடுக்கத் தயங்குகிறீர்கள். எனக்கு வந்திருக்கும் நோய் பசு-அம்மை என்று நினைக்கிறீர்களா? அவ்வாறு இருக்க முடியாது. ஏனெனில் நான் முன்னர் ஒரு முறை பசு-அம்மையால் துன்பப்பட்டிருக்கிறேன்" என்றாள். ஜென்னருக்கு இதிலிருந்து ஓர் உண்மை புலப்பட்டது. இதை அடிப்படையாகக் கொண்டே அவர் பல ஆராய்ச்சிகள் செய்யத் தொடங்கினார்.

தம் இருபத்தோராம் வயதில் ஜென்னர் இலண்டனுக்குச் சென்றார்; அங்குள்ள ஸெயின்ட் ஜார்ஜ் மருத்துவ சாலையில் ஒரு மாணவராகச் சேர்ந்து பயின்

ரூர். ஒரு நாள் தம் ஆசிரியரான ஜான் ஹன்டர் என் பாரிடம் தம்மிடம் ஒரு குடியானப் பெண் சொன்ன தைத் தெரிவித்தார். அதற்கு ஆசிரியர் "அதைப் பற்றி நீ சிந்தித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. நீ அதை முயன்றுபார்; பொறுமையுடன் இரு; செய் வதைத் திருந்தச் செய், வெற்றி பெறுவாய்" என்று கூறினர்.

ஜென்னருடைய படிப்பு முடிவுற்றது; தம் சொந்த ஊருக்குத் திரும்பிச் சென்று அங்கே மருத்துவத் தொழி லில் ஈடுபட்டார். ஆனல் ஸாட்பாரியில் ஒரு குடியானப் பெண் பசு-அம்மையைப் பற்றிக் கூறியதும், அது பற் றித் தம் ஆசிரியர் அளித்த அறிவுரையும் அவருடைய மனத்தில் அலைவீசிக் கொண்டே யிருந்தன.

1780-ஆம்ஆண்டில் ஒரு நாள் தம் நண்பரொரு வருக்குப் பின்வருமாறு ஜென்னர் கடிதம் எழுதினர். அதில் "அருமை நண்ப, நான் ஸாட்பரியில் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு நிகழ்ச்சி நடந்தது. அன்று முதல் பசு-அம்மையைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று நினைத்து வருகிறேன். அதில் நான் வெற்றியடைந்தால், மக்கள் இனத்திற்கே ஒரு பெரிய நன்மை விளையும். ஆனல் இதைப் பற்றி ஒருவரிடமும் பேசாதே. ஒருகால் நான் ஆராய்ச்சியில் வெற்றிபெற வில்லையானல் எல்லோரும் என்னை ஏளனம் செய் வார்கள்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இதன் பிறகு ஜென்னர் சுமார் பதினறு ஆண்டுகள் சோதனை நடத்தி 1796-ஆம் ஆண்டு மே மாதம் பதி னன்காம் நாளன்று பசு-அம்மைக்கு ஒரு மருந்தைக் கண்டுபிடித்தார்; அன்று தாம் கண்டுபிடித்த உண்

மையை மக்களுக்கு நிரூபித்துக் காட்டினுர். மக்கள் ஏராளமாகத் திரண்டு வந்து கூடினர். பெரியம்மை கண்டிருந்த ஒரு பசுங் கன்று, பெரியம்மை கண்டிருந்த ஒரு மனிதன், நோயற்ற எட்டு வயதுள்ள ஒரு சிறுவன் இம் மூவரும் கொணரப்பட்டனர். கன்றின் தேகத்திலிருந்து 'எதிர் நச்சை' எடுத்து சிறுவனின் தேகத்தில் செலுத்தினுர் ஜென்னர்; அது அவனுடைய இரத்தத்தோடு நன்கு கலந்த பிறகு, பெரியம்மை கண்ட மனிதனுடைய உடம்பிலிருந்து சிறிது உதிரத்தை எடுத்தார்; அதைச் சிறுவனுடைய உடம்பிற் செலுத்தினுர். நோய்க் கிருமிகள் உட்சென்றன; ஆனுல் சிறுவனை அவை சிறிதும் பாதிக்கவில்லை.

ஒரு கன்றுக்குப் பெரியம்மை கண்டவுடன் அதன் தேகத்தில் அந்த நோயைத் தடுக்க இயற்கையாகவே ஒரு பொருள் உண்டாகிறது. அதைத்தான் 'எதிர் நச்சு' என்று உடல் நூற்புலவர் சொல்லுகிருர்கள். அதை நம் தேகத்தில் செலுத்திக் கொள்வோமானுல், நமக்கு அவ்வியாதி வராதபடி அது தடுக்கும்.

ஜென்னர் தம் ஊரிலும் சுற்றுப்புறங்களிலும் இருந்த எல்லா ஏழை மக்களுக்கும் இலவசமாக அம்மை குத்தினுர். மக்களுக்கிருந்த அச்சத்தை நீக்கத் தம் மகனுக்கு அவர் மூன்றுமுறை அம்மை குத்திக் காண்பித்தார். இவ்வாருக அம்மை குத்திக் கொள்ளும் பழக்கம் தோன்றி நாடெங்கும் பரவியது.

அம்மை குத்தும் முறையை மறைமுகமாக வைத்துக் கொண்டிருந்தால் மருத்துவ உலகில் மிக்க புகழ் பெற்றிருக்கலாம். மேலும் அவர் எவ்வளவு பொருள் வேண்டுமானுலும் சம்பாதித்திருக்கலாம். ஆனுல் அவர்

பொருளுக்காகவோ, புகழுக்காகவோ உழைக்கவில்லை. அவர் தம்முடைய நேரத்தையும், பொருளையும், உடல் நலத்தையும் இழக்க நேர்ந்தது. ஆனால் இவைகளையும் அவர் பொருட்படுத்தவில்லை.

ஜென்னருடைய சிறந்த தொண்டிற்கு விஞ்ஞானிகளும் படித்த சிலரும் அளித்த கைம்மாறு என்ன, தெரியுமா? அவர் சொல்வதை எதிர்த்துப் பலர் கட்டுரைகள் எழுதினர்; அவரை ஏளனஞ் செய்து பல படங்கள் வெளியிடப்பட்டன. 'மனிதர்களைப் பசுக்களாக மாற்றவே இது வழி' என்று பலர் அவருடைய சேவைக்குக் காரணங் கற்பித்தனர்!

ஆனால், பொதுமக்களுடைய ஆதரவு ஜென்னருக்கு விரைவில் கிடைத்தது. மனித சமூகத்திற்குப் பேருதவி செய்த பெரியாரென்று இவரை யாவரும் போற்றலாயினர்.

### அரும்பதவுரை

எதிர் நச்சு - எதிர்க்கக்கூடிய சக்தியுள்ளவிடம். உடற் நூற் புலவர் - தேகநிலையைப் பற்றி ஆராய்ந்தறிந்த அறிவாளி. மறைமுகம் - இரகசியம். உதிரம் - இரத்தம்.

### வினாக்கள்

1. ஜென்னரின் பிறப்பு வளர்ப்பைப் பற்றி நீ அறிவது என்ன?

2. "ஜென்னருக்கு இதிலிருந்து ஓருண்மை புலப்பட்டது"—விளக்குக.

3. ஜென்னரின் ஆசிரியர் யார்? அவர் ஜென்னரை எப்படி ஊக்கினார்?

4. ஜென்னர் தம் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததென்ன?

5. ஜென்னர் தாம் கண்டுபிடித்த உண்மையை எவ்வாறு நிரூபித்துக் காட்டினர்?

6. 'எதிர் நச்சு' என்பது யாது? அது நோயைத் தடுப்பதில் எவ்வாறு பயன்படுகிறது?

7. ஜென்னரிடம் நீவிர் காணும் உயர்ந்த குணங்கள் எவை?

### பயிற்சி

1. இரத்தம் என்னும் பொருளில் வரும் சொற்கள் மூன்று கூறுக.

2. 'அம்மைக் குத்துவதின் நன்மை' என்பது பற்றி பத்து வரியில் எழுதுக.

3. ஜென்னரைப்போல மக்கள் நோய்த் துன்பத்தைப் போக்குவதற்கு உழைத்த வேறு சில உடற்நூற் புலவர்களைப் பற்றி விசாரித்து அறிக.

# செய்யுள்

## I. வாழ்த்து

### 1. கலைமகள்

1. வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள் நின்றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்.

—சுப்பிரமணிய பாரதியார்.

#### அரும்பதவுரை

கொள்ளை - நிறைந்த. கவிதை - பாடல். கூறுபாவலர் - இயற்றவல்ல கவிகள். ஓதும் - பயிலப்படும். ஒளிர்வாள் - பிரகாசிப்பாள். கள்ளமற்ற - வஞ்சனையில்லாத. உள் பொருள் - உள்ளே விளங்கும் பொருள். முனிவர் - தியானம் செய்பவர்.

### 2. ஈசன்

2, மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே!

—திருநாவுக்கரசர்.

#### அரும்பதவுரை

மாசு இல் - குற்றமில்லாத. வீங்கு - பெருத்த. இளவேனில் - தென்றல் காற்று. மூசு - மொய்க்கின்ற. வண்டு அறை - வண்டுகள் ஒலிக்கின்ற. பொய்கை - குளம்.

### 3. திருமால்

3. குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயினசெய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

—திருமங்கையாழ்வார்.

**அரும்பதவுரை**

குலம் - நல்ல மரபில் பிறக்கும் பேறு. நிலந்தரம் - தரை மட்டம். நீள் விசும்பு - சுவர்க்க பதவி. வலம் - வல்லமை. பெற்ற தாயினும் - பெற்ற தாயைக் காட்டிலும்.

## II. கதை

### 1. தேசிங்கு குதிரையை அடக்குதல்

கனைத்த குதிரையைக் கண்ணாலே
கண்டான் காளை தேசிங்கு
குதிரையைத் தட்டிச் சலாம் வாங்கினான்
கொல்லும் சிங்கம்போல
" அண்ணா வாடா, தம்பி வாடா, மோவுத்துக் காரா நீ !
கால்கயிற்றைக் கழுத்துக் கயிற்றைக்
கடுக அவிழ் " என்றான்.
அந்தச் சொல்லைக் காதிலே கேட்டான்
மோவுத்துக்காரனும் ;
சொன்னவுடனே சல்தியாய்ப் பாய்ந்து
சுருக்கா யவிழ்த்தானும் ;

தங்கத்தாலே சீனிபோட்டுத் தடவியே கொடுத்தானும் ;
அந்தக் குதிரையைக் கண்ணாலே கண்டு
அகமு மகிழ்ந்தானும் ;
அரிய ரிபரந் தாமாவென்று அலறி யெழுந்தானும் ;
கோவிந்தாஸ்ரீ கிருஷ்ணாவென்று கும்பிட் டெழுந்தானும்;
பாராசாரிக்குச் சலாம் வாங்கிப் பாய்ந்தேறினானும் ;
புலிக்குட்டியைப் போலே பாய்ந்து புரவி ஏறினானும் ;
ஏறினவுடனே பாராசாரி என்ன செய்யுது பார் ;
தடதட வென்று தவிக்குதுபாரு அந்தக் குதிரைதானும்
கிடுகிடு வென்று கிளம்பிக் குதித்தது
அந்தக் குதிரைதானும் ;
லகானை இழுத்துக் கையிலேபிடித்தான் ராஜா தேசிங்கு;
"அரியரி ஸ்ரீ முகுந்தா" என்று
அசுவத்தைத் தட்டிவிட்டான் ;
தட்டின தட்டில் குதிரைகிளம்பித் தரையில் நில்லாமல்;
ஆகாய மார்க்கம் வந்து பாயுது அந்தமுள்ள குதிரை ;
சூரியன் போலத் துலங்குது பாரு
சொர்ண மேனிக் குதிரை ;
கண்கண்ட தூரம் பார்த்து ராசர்கள்
கண் கலங்கினார்கள் ;
பாய்கிற குதிரையைக் கண்ணால்
கண்டு பரிதவித்தார்கள்.
மேக மண்டலம் அளாவி வருவதைப்
பார்த்தான் தேசிங்கு;
லகானை இழுத்துச் சிமிட்டா கொடுத்தான்
ராசா தேசிங்கு ;
சிமிட்டா கொடுத்த வேகத்தாலே சீறிப் பாயுதுபார் ;
கோபம் வந்து மூண்டுக்கொண்டது ராசாவுக் கானாலும்;
காடு மலைகள் செடிகளெல்லாம் கலங்கி நடுங்கிடவே,

மலைகள் இடிந்து தவிடு பொடியாய்
மண்மேல் விழுந்திடவே,
குன்று மலைகள் தாண்டிக் குதிரை குதித்துப் போகிறது,
குன்றுகள் எல்லாம் பொடிப் பொடியாய்க்
குலுங்கி விழுந்ததுபார்.

—தேசிங்கு ராசன் கதை

### அரும்பதவுரை

காளை-காளைபோன்ற இளமை வலிமை கட்டழகு இவைகளை உடையவன். சலாம் - வணக்கம் (உருது வார்த்தை). கடுக - விரைவாக. மோவுத்துக்காரன் - குதிரைக்காரன். சல்தி - விரைவு (உருது வார்த்தை). அகம் - மனம். அரி அரி பரந்தாமன் - இவை திருமாலின் பெயர்கள். புரவி - குதிரை. துலங்குது - பிரகாசிக்கிறது.

### பயிற்சி

இக்கதையை இருபது வரியில் எழுதுக.

## 2. அப்பம் திருடிய எலி

செட்டியார் வீட்டில் அடுக்களையில்—சென்ற
தீபா வளியன் றிரவுதனில்
வட்டியில் அப்பம் இருந்ததம்மா !—அதை
வாசத்தி னால் அறிந்த தோர் எலிதான் ; 1.

நெய்யினில் சுட்ட பணிகாரம்—இது
நேர்த்தியாய்ச் சுட்ட பணிகாரம்,
பையப் பையக் கடித்துண்பதற்கும்—வெகு
பக்குவமான பணிகாரம். 2.

யார்க்கும் கிடையாப் பெருநிதியாம்—இதை
யான் இன்று பெற்றதென் பாக்கியமே,
பார்க்கும் பொழுதேநீர் வாயினிலே—ஊறிப்
பாய்கின்றதே பசி யாகின்றதே. 3.

[அப்போது வேறு சில எலிகள் சத்தமிடக் கேட்டு]

'என்ன சத்தம்! ஓ! ஓ! தம்பிமார்கள்—கூடி
இங்கு விளையாட வந்தனரோ?
அன்னவர் ஓடிவருமுன்னே—யானும்
அப்பத்தைக் கொண்டு மறைந்திடுவேன்; 4.

ஏதும் ஒருபொடி யாகிலும்—யான் அவர்க்கு
ஈந்திடேன்; முற்றுமே தின்றிடுவேன்;
ஓதிய தானம் தனக்குப்போக—மீதி
உள்ளவர் அல்லவோ செய்திடுவார்?' 5.

என்று சொல்லி அந்த அப்பத்தினை—வாயில்
ஏந்திக் கடித்திழுத் தோடிடவே.
கன்றப் பசித்த இளைஞரெல்லாம்—வந்து
கால்கடுக்கத் தோடிப் போயினரே 6.

ஆரும் அறியாத மூலையிலே—அந்த
அப்பத்தை அவ்வெலி கொண்டு வைத்துக்
கூரிய பல்லால் கறம்பி ஒரு பொடி
கூடச் சிதறாமல் தின்றதம்மா! 7.

மட்டுக்கு மிஞ்சிப் புசித்ததனால்—மூச்சு
வாங்கி வருந்தி வயிறூதி
கட்டப் படுவதைச் சுற்றத்தார் எல்லோரும்
கண்டொரு பண்டிதர்க் காளும்விட்டார்! 8.

பண்டிதர் வந்துகை பார்த்தனர்; அவ்வெலி
பண்டம் முழுதையும் உண்ட கதை
விண்டதும் கேட்டு, குறிகளும் நோக்கி,
விதிப்படி ஆய்ந்துவிளம்பினரே. 9.

"அப்பம் முழுதும்நீ தின்றனையே—அதை
அன்பிற் குரியஉன் தம்பியர்க்கும்
ஒப்பவே பங்கிட் டளித்திருந்தால்—துன்பம்
ஒன்றும் வந்துன்னை அணுகாதே. 10.

அன்றியும் உன்தம்பி மாரும் கடும்பசி
ஆறிக் களித்திருப் பார்கள் அன்றோ?
இன்றினிச் செய்வதென் இவ்வுலகம்—விட்டு
யாத்திரை போவது திண்ணம்,' என்றார். 11.

ஆனதனாலே கிடைத்த பொருளை—நாம்
ஆகு மட்டும்பகுத் துண்ண வேண்டும்;
ஈனமாந் தன்னயத் தால்வருந் துன்பமே;
இன்பம் நயக்கும் பொதுநயமே. 12.

அளவு கடந்திடில் ஆரமுதும்—விஷம்
ஆகும் என்றுநம தான்றோர்கள்
உளபடியே சொன்ன வாக்கியத் துண்மையை
உள்ளத்திற் கொள்ளுங்கள், தோழர்களே! 13.

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

### அரும்பதவுரை

வட்டி - வட்டமான பாத்திரம், கன்ற - சுட, கடுக்க - நோவ, கூரிய - கூர்மையான (கூறிய - சொன்ன) இடையின வல்லின எழுத்துக்கள் மாறுவதால் பொருள் வேறு படுவதை மாணவர் கவனிக்க வேண்டும், மட்டு - அளவு, ஊதி - பருத்து, கட்டம் - கஷ்டம், பண்டிதர் - வயித்தியர்.

### பயிற்சி

1. இக்கதையை உன் சொந்த வாக்கியத்தில் எழுது.
2. இக்கதையால் அறியப்படும் இரண்டு நீதிகள் எவை?

# III. நீதியுரை

## 1. இனியவை நாற்பது

பிச்சைபுக் காயினும் கற்றல் மிகஇனிதே ;
நற்சுவையில் கைகொடுத்தல் சாலவும் முன்னினிதே ;
முத்தேர் முறுவலார் சொல்லினி(து) ; ஆங்கினிதே
தெற்றவும் மேலாயார்ச் சேர்வு. 1.

கயவரைக் கையிகந்து வாழ்தல் இனிதே ;
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே ;
எளியர் இவரென்று இகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது. 2,

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே ;
தானம் அழியாமை தான் அடங்கி வாழ்வினிதே
ஊனமொன் றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது. 3.

வருவாய் அறிந்து வழங்கல் இனிதே ;
ஒருவர்பங் காகாத ஊக்கம் இனிதே ;
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்த்தல் இனிது. 4.

—பூதஞ் சேந்தனர்.

### அரும்பதவுரை

1. பிச்சை புக்கு - பிச்சையெடுத்து, சாலவும் - மிகவும், தெற்றவும் - தெளிவாகவும், முறுவலார் - பல் வரிசை உடையவர்.

2. கயவர் - கீழ்மக்கள், கையிகந்து - நீக்கி, உயர்வு உள்ளி மேன்மேலும் தான் உயர்வடைய வேண்டும் என்பதை நினைத்து,- ஒளிபட - கீர்த்தியுண்டாக.

3. மானம் - பெருமை, தானம் - தனது நிலை, ஊனம் - குறைவு.

4. வருவாய் - பொருள் வரும்வழி, பங்கு - பக்கம், ஆகாத - சாராத, பெருவகைத்து - பெரும்பயனையுடையது, பெட்டவை - விரும்பியவை, திரிபு இன்றி - இயல்பில் மாறுபடாமல்.

## 2. திருக்குறள்

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு, 1.

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 2.

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங் (கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு. 3.

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். 4.

மகன்தந்தைக் (கு) ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல். 5.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 6.

விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 7.

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம். 8.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல (து)
அன்றே மறப்பது நன்று. 9.

யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 10.

தீயினல் சுட்டபுண் உள்ஆறும் ; ஆருதே
நாவினல் சுட்ட வடு. 11.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 12.

உலகத்தோ (டு) ஒட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார். 13,

ஒறுத்தார்க் (கு) ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 14.

அழுக்கற் (று) அகன்ருரும் இல்லை ; அஃதில்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல். 15.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும். 16.

சொல்லுக சொல்லில் பயனுடைய ; சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல். 17.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 18.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 19.

தோன்றின் புகழொடு தோன்றுக ; அஃதிலார்
தோன்றலின் தோன்ருமை நன்று. 20.

வலியார்முன் தன்னை நினைக்க தான்தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து. 21.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கொள்வேம் எனல். 22.

உள்ளத்தால் பொய்யா (து) ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். 23.

நகையும் உவகையும் கொல்லுஞ் சினத்தின்
பகையும் உளவோ பிற. 24.

இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 25.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறி(து)
இன்னுயிர் நீக்கும் வினை. 26.

எப்பொருள் எத்தன்மைத்(து) ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு. 27.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 28.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் ; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 29.

செவிக்குண(வு) இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். 30.

அறிவுடையார் எல்லாம் உடையார் ; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 31.

எண்ணித் துணிக கருமம் ; துணிந்தபின்
எண்ணுவம் என்ப(து) இழுக்கு. 32

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 33

அச்ச முடையார்க்(கு) அரணில்லை ; ஆங்கில்லை
பொச்சாப்(பு) உடையார்க்கு நன்கு. 34

உடையர் எனப்படுவ(து) ஊக்கம் ; அஃதில்லார்
உடைய(து) உடையரோ மற்று. 35

முயற்சி திருவினை ஆக்கும் ; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 36

சொலல்வல்லன் சோர்விலான் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. 37

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 38

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. 39

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 40

### அரும்பதவுரை

1. அகர முதல - 'அ' என்னும் எழுத்தை முதலான உடையன. ஆதிபகவன் - முதற்கடவுள்.

2. அரிய - அருமையான செயல்கள். செய்கலாதார் - செய்யச் சக்தியில்லாதவர்.

3. சிறப்பு - மோட்சம். ஈனும் - தரும். அறத்தின் ஊங்கு- தருமத்தைவிட மேலான.

4. மழலைச் சொல் - கொஞ்சிப் பேசும் வார்த்தை. கேளா. தார் - கேட்டு இன்பம் அடையாதவர். யாழ் - வீணை.

5. ஆற்றும் - செய்யும். என் நோற்றான் கொல் - என்ன தவம் செய்தானோ.

6. என்பும் - தம் உடம்பாலும். பிறர்க்கு உரியர் - மற்றவர்களுக்கே பயன்படுவர்.

7. சாவாமருந்து - அமிர்தம். விருந்து - விருந்தினர். புறத்தது ஆ - வீட்டிற்கு வெளியில் இருக்க.

8. அமர்ந்து - விரும்பி. அகத்தான் - உள்ளன்புடையவன்.

9. நன்றி - ஒருவன் முன் செய்த உதவி. நன்று அன்று - அறமாகாது.

10. காவார் - அடக்காதவர். நா காக்க - நாக்கு ஒன்றையாவது அடக்கக் கடவர்.

11. உள் ஆறும் - (உடம்பில் இருப்பினும்) மனத்தில் அப்பொழுதே ஆறிவிடும். சோகாப்பர் - துன்பப்படுவர்.

12. விழுப்பம் - மேன்மை. உயிரினும் - உயிரைவிட. ஓம்ப - பாதுகாக்க.

13. ஒட்ட - பொருந்த. ஒழுகல் - நடப்பதை. பல - நூல்களையும்.

14. ஒறுத்தார்க்கு - (தமக்குத் தீங்கு செய்தவரைத்) தண்டித்தவருக்கு. பொன்றும் துணையும்-உலகம் அழியும் வரையில்.

15. அழுக்கற்று - பொறாமைப்பட்டு. அகன்றாரும் - பெரியவரானவரும். பெருக்கத்தின் - மேன்மைப்படுவதிலிருந்து.

16. புறங்கூறி - ஒருவனைக் காணாத விடத்து இகழ்ந்துபேசி. பொய்த்து - கண்டபோது நண்பனைப்போல் நடித்து. ஆக்கம் - நன்மை.

17. பயனுள்ள வார்த்தைகளைச் சொல்லுக; பயனற்ற சொற்களைப் பேசாதிருக்க என்பது கருத்து.

18. தீயவை - தனது நன்மைக்காகப் பிறருக்குச் செய்யும் தீச்செயல்கள். தீய - துன்பத்தை.

19. தக்கார் - தகுதியுடையவர். தாள் ஆற்றி - முயற்சி செய்து. தந்த - சேர்த்துவைத்த. வேளாண்மை - பிறர்க்குச் செய்யும் உதவி.

20. புகழொடு - புகழ் அடைவதற்கு ஏற்ற நல்ல குணத்தோடு.

21. மெலியார் மேல் - எளியவரிடத்து. தன்னை - தான் அஞ்சி நிற்கும் நிலையை. எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமையே அருள் என்பது கருத்து.

22. பிறன் பொருளைத் திருட எண்ணுவது பாவம் என்பது கருத்து.

23. உள்ளத்தால் - (ஒருவன்தன்) மனச் சாட்சிக்கு ஏற்ப. உலகத்தார் - உயர்ந்தோர்.

24. நகையும் - துறவிகளுக்கு அருளால் உண்டாகும் முக மலர்ச்சியும். உவகையும் - மனமகிழ்ச்சியும்.

25. இன்னா - (தமக்குத்) தீமை. ஒறுத்தல் - தண்டித்தல். நாண - வெட்கம் அடையும்படி. நல் நயம் - அவருக்கு மகிழ்ச்சி தரும் செயல். விடல் - அவர் செய்த தீமையையும் தாம் செய்த நன்மையுமாகிய இரண்டையும் மறந்து விடுதல்.

26. நீப்பினும் - உடலைவிட்டு நீங்கிப் போகுமாயினும். பிறிது - மற்றொரு பிராணியின்.

27. எப்பொருள் - ஏதேனும் ஒரு பொருள்- அறிவு - மெய் யுணர்வு.

28. எண் - கணிதம். எழுத்து - இலக்கணம். இவ் இரண் டும் - இந்த இரண்டு கலைகளும்.

29. கற்றோர் - கலைகளைக் கற்றவரே. கற்றோரே உயர்ந்தவர்; கல்லாதவர் தாழ்ந்தவர்.

30. காதினால் (ஆசிரியரிடம்) கேட்கப்படும் கேள்வி சிறிது - சிறிய அளவான உணவு. ஈயப்படும் - இடப்படும்.

31. அறிவு உடையார் - கூர்மையான அறிவுள்ளவர். அறி வுடையவரே செல்வமுடையவர். மற்றவர் வறிஞரே யாவார்.

32. கருமம் - செய்யத் தகுந்த காரியம், எண்ணி - ஆராய்ந்து. துணிக - தொடங்குக. இழுக்கு-குற்றம்.

33. ஒருவன் தானடையும் பெருமைக்கும் சிறுமைக்கும் அவனுடைய செயலே உரைகல் ஆகும்.

34. அச்சம் - பயம். அரண் - பாதுகாப்பு. பொச்சாப்பு - மறதி.

35. ஊக்கம் - உற்சாகம். ஊக்கம் உடையவரே உண்மைச் செல்வராவார் என்பது கருத்து.

36. திருவினை - செல்வத்தை. இன்மை - வறுமை, புகுத்தி - செலுத்தி.

37. சொலல் வல்லன் - தான் எண்ணியதைப் பிறர் ஏற்றுக் கொள்ளும்படி சொல்லுதலில் வல்லவனாய். சோர்வு - மறந்து விடுதல். இகல் - வாக்கு வாதம்.

38. அடுத்தது - தன்னை யடைந்த பொருளின் நிறத்தை பளிங்கு - ஸ்படிகம் என்னும் ஒரு வகைக் கல்.

39. உறு பசி - மிகுந்த பசி. ஓவா பிணி - நீங்காத நோய். செறு பகை - அழிக்கும் பகைவர். சேராது - இல்லாமல்.

40. உடுக்கை - (பலர் கூடிய சபையில் இடுப்பில் கட்டிய) ஆடை. இழந்தவன் - நெகிழ்ந்தவன். கைபோல - கை சென்று உதவுவது போல. இடுக்கண் - (நண்பனுக்கு நேர்ந்த) துன்பம் நட்பு - நண்பன் கடமையாகும்.

# IV. பல் சுவை

## 1. இராட்டைப் பாட்டு

பல்லவி

ஆடுராட்டே சுழன்றாடு ராட்டே.

அனுபல்லவி

சுழன் றுசு ழன் றுசு ழன்றாடு ராட்டே —இனிச்
சுயராஜ்யம் வந்ததென் று ஆடுராட்டே.

சரணங்கள்

ஏழைகள்கண்ணீர் சொரிய மிகவருந்திப்—பல
எத்துகள் செய்தே பிழைக்கும் மனித ரெல்லாம்
வாழமுடி யாதினிமேல் வஞ்சனையினுல்—அவர்
வாழ்க்கை திருந்து மென் று (ஆடு)

பட்டணத்து வீதிகளில் சுற்றியலைந்து—மிகப்
பாடுபடும் கிராமத்துப் பத்தினிப் பெண்கள்
இஷ்டமுடன் தங்குடிசை நிழலிருந்து—நூல்
இழைத்துப் பிழைப்ப ரென் று (ஆடு)

அந்நியர்கள் நூல்கொடுத்து ஆடைகொடுத்து—நம்
அங்கத்தை மூடுகின் ற பங்கமொழியும்;
கன்னியர்கள் நூற்கப் பல காளைகள் நெய்ய—நாம்
காத்துக் கொள்வோம் மானமென் று. (ஆடு)

—நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை.

அரும் பதவுரை

1. எத்து - ஏமாற்றி வாழும் வாழ்க்கை. திருந்தும் - ஒழுங்காகும். அங்கம் - அவயவம். பங்கம் - குறைவு. காளைகள் - இளைஞர்கள்.

## 2. மழைக்குறி

ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி — மலை
  யாளமின்னல் ஈழமின்னல் சூழ மின்னுதே!
நேற்றுமின்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே!—கேணி
  நீர்ப்படுஞ்சொ றித்தவளை கூப்பிடுகுதே!
சேற்றுநண்டு சேற்றில்வளை ஏற்றடைக்குதே! — மழை
  தேடியொரு கோடிவானம் பாடியாடுதே!
போற்றுதிரு மாலழகர்க் கேற்றமாம் பண்ணைச் — சேரி
  புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வமே.

—என்னயினுப் புலவர்.

### அரும்பதவுரை

குறி - அடையாளம். ஈழம் - இலங்கை (பொன்னையுடையது என்பது பொருள்). கொம்பு-கிளைகள். நீர்ப்படும் - நீரில் வாழும். வானம்பாடி - ஒரு வகைப் பறவை.